74

74/1.52

ஸம்புடம் 10
ஸஞ்சிகை 12

ஸ்ரீ:

கர-ஹூ
மார்கழி- மீ

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை

ஸம்பாதகர்
P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M. A., B. L. சிரோமணி.
(அட்வொகேட்)

ப்ரசுரிக்குமிடம்
நெ. 2. ஆதியப்பமுதலி தெரு, புரசவாக்கம், சென்னை 7.

தனிப்ரதி விலை 0-4-0

DECEMBER 1951
VOL 10 NO 12.

JL
199528

விஷயஸூசிகை

விஷயம்			பக்கம்
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	...	368
2.	ஸ்ரீ ராமனின் பாதுகைகள்	...	371
3.	நற்போதுபோக்கு	...	375
4.	உபயவேதாந்த ஜககண்ட்யம்	...	377
5.	ஸதுபதேசம்	...	380
6.	செய்திகள்	...	382
7,	கோதாஸ்துதி	...	383

—៰—

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

கர-ஸூ தை.மீ 1952-ஜனவரி-பிப்ரவரி-மீ

[உத்தராயனம்-ஹேமந்த ருது மகர-மீ]

14—1—52	1௳	திங்கட்கிழமை	...	அதிதி. ஸங்க்ராந்தி. திருப்பாவை சாற்றுமுறை. மகரரவி 21-54.
15—1—52	2௳	செவ்வாய்க்கிழமை	...	மகரக்ருஷ்ண த்ருதீயை திதி. கநு பாரிவேட்டை.
17—1—52	4௳	வியாழக்கிழமை	...	ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீ மாலோலவித்வத் ஸபையின் 11-வது வார்ஷிக ஸதஸ் ஆரம்பம்.
18—1—52	5௳	வெள்ளிக்கிழமை	...	ஹஸ்தம்; ஸ்ரீ கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்.
22—1—52	9௳	செவ்வாய்க்கிழமை	...	தசமி திதி.
23—1—52	10௳	புதன்கிழமை	...	ஸர்வ ஏகாதசி. ஏகாதசி-த்வாதசி திதி த்வயம்.
26—1—52	13௳	சனிக்கிழமை	...	ஸர்வ அமாவாஸ்யை. உத்திராடம்; ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டம் (இஞ்சிமேடு) ஸ்ரீ ஸ்ரீ ரங்கசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
2—2—52	20௳	சனிக்கிழமை	...	ரதஸப்தமி.
6—2—52	24௳	புதன்கிழமை	...	ஸர்வ ஏகாதசி.
12—2—52	30௳	செவ்வாய்க்கிழமை	...	மகரக்ருஷ்ண த்விதீயை திதி. கும்பரவி 49-10.[மறுநாள்ஸங்க்ரமண தர்ப்பணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 10 } கர ஹூ மார்கழி மீ { ஸஞ்சிகை 12

'அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யநிர்மிதா ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக, வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A., B. L. அட்வோகேட், திருச்சி.]

'வாஸதேயீம்', 'வஸதி' என்பதற்கு ராத்ரி என்றும் வாஸக்ருஹம் என்றும் இரண்டு பொருள். 'வஸதீ ராத்ரி வேஶ்மநோ:' என்று அமரம். நாம் வஸிக்கும் க்ருஹமும் குடும்பமும் ஸம்ஸார இருளே. புவநமும் இருளடைந்ததே. 'வாஸதேயீ' என்பது இருள் கூட்டம். 'நிவஸிஷ்யஸி மய்யேவ' என்று கீதை பாடியபடி வாஸுதேவ ப்ரஹ்மத்தினிடத்திலேயே நாம் வஸிக்கவேணும். வாஸுதேவன் என்ற திரு நாமமே அதைக்காட்டுவது. அந்த வாஸக்ருஹத்தை—அந்த சரணத்தை—விட்டு பூமியையும், அதிலுள்ள க்ருஹத்தையும் நாம் வாஸஸ்தானமாக நினைக்கிறோம். ப்ரஹ்மமென்னும் ஆந்தர (உள்) ஜ்யோதிஸ்ஸில் வஸிப்பதைவிட்டு வெப்ப இருட்டு ஸம்ஸார பூமியில் இருட்டு மாளிகையில் வஸிக்கிறோமென்பதை 'வாஸதேயீ' என்பதால் வ்யஞ்ஜநம் செய்கிறார். 'பூபத்மம்' என்று பூமியைக் குறிப்பர். அஜ்ஞாந இருளில் இந்த பூபத்மம் (தன் ஆநந்த ஹர்ஷத்தன்மை) தெரியாமல் துக்கமயமாக நம்மால் நம்வினைப்பயனால் அநுபவிக்கப்படுகிறது. ஜ்ஞாநஸூர்யன் உதிக்கப்போகும் தருணத்தில் தாமரை ஸூர்யகிரண ஸ்பர்சத்தால் ஹர்ஷத்தோடு மலர்வதுபோல, பூபத்மமும் தன் அநுகூலஸ்பாவம் மலர்ந்து இனிப்புத்தன்மை பரவுகிறது. இதை அடுத்த ச்லோகம் தெளிவாக்கும். பூபத்மத்தைக் கவர்ந்திருக்கும் இருள்கூட்டத்தை நீக்குகிறது. உதிக்கும்ஜ்ஞாநஸூர்யனுடைய முதல் தேஜஸ் கிரணங்கள். 'வஸுதேயாதி'—இந்த ஜ்ஞாநஸூர்யப்ரகாசம் இருளகன்ற விஷ்ணுபதம் எனும் ஆகாசத்தில் காணப்படுகிறது. 'ஆராத்' இதற்கு தூரம் ஸமீபம் என்ற இரண்டு பொருளுமுண்டு. இருவிதத்திலும் கொள்ளலாம். தூரயிருப்பது நெருங்கிக்கொண்டே வரும். இந்த 'யாதி' தேஜஸ்ஸை 'பதாகாஸ்தாநகம்' கொடிபோன்றது என்று வர்ணிப்பது ரஸம். மோக்ஷ ஜ்யோதிஸ்ஸுக்குச்செல்வதற்கு இது கொடியேற்றம்; த்வஜாரோஹணம்போன்றது. த்வஜ படம்போலக் காண்கிறது. 'பதாகா' என்பது கொடி. 'பதாகா' என்று நாடகக்கதையில் முக்ய நாயகனுக்கு உபகாரமாயிருக்கும் உபநாயகன் வ்ருத்தாந்தத்திற்குப் பெயர். ராமாயணத்தில் ஸுக்ரீவ ஸஹாயம் ராம நாடகத்தில் பதாகை என்று ஸ்ரீ கோவிந்தராஜர் பணிப்பு. இங்கே பெரியதிருவடியாகிய கருடன் பதாகை—த்வஜம். அவர் இந்த முடிவங்கத்தில் மோக்ஷந்தரும் ஸம்ப்ரமம் எனும் தத்வமான பாத்ரமாக ப்ரவேசிக்கிறார். வேதரூபியாக பகவானுக்கு இவர் முதன்முதலிலிருந்தே ஜீவமோக்ஷணபாகத்தில் முக்யஸஹாயமாக இருந்துவந்திருக்கிறார். அதனால் ஸுக்ரீவாதிகளைப்போல ஸம்ஸாரஸமுத்ரத்தால் சூழப்பட்ட தேஹலங்கையில்சிறையிருக்கும்ஜீவனை மீட்பதில் ஸுபர்ணர் சிரகாலமாயுபயோகப்படுகிறவர். சப்தப்ரஹ்மமாகிய வேதபுருஷனும், பரப்ரஹ்மமும்ஜீவனுக்கு ஜ்ஞாநமளித்து ஸம்ஸாரஸமுத்ரத்திலிருந்து உத்தரணம்செய்யக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். கருடன் இங்கே இந்த ஜீவமோக்ஷண வ்யாபாரத்தில் 'பதாகை' போன்றவரென்பதையும், 'பதாகாஸ்தாநகயாதி' என்பது வ்யஞ்ஜநம் செய்யலாம். இதோ அடுத்தாற்போல் அவர் ப்ரவேசிக்கப்போகிறார். 'பதாகாஸ்தாநகம்' என்பது நாடகத்தில் 'யத்ரார்த்தே சிந்திதேऽந்யஸ்மிந் தல்லிங்கோऽந்ய: ப்ரயுஜ்யதே। ஆகந்துகேந பாவேந பதாகாஸ்தாநகம் து தத்॥' என்கிற லக்ஷணத்தால் வர்ணிக்கப்பட்டுள்ளது. ஒன்றை நினைத்து நாம் ஆசைப்பட்டுக் கொண்டிருக்கையில் அசிந்திதமாக, நாம் நினைக்காமலேயே, அதற்க

நுகூலமான அதேஜாதியான மற்றென்று ஸித்திப்பது நமக்குத் தெரிவிக்கப்பட்டால் அது பதாகாஸ்தாநகம். நாமாசைப்பட்டது ஸித்திப்பதற்கு மிக்க ஸஹாயமானது இங்கே விஷ்ணுபக்தி. ஆசைப்பட்டது ஸங்கல்ப ஸூர்யன். அதை ஸாதிக்கும் பதாகை (ஸஹாயமானது) தயாதேவியின் உதயமும், ஸம்ரம்பதத்வமான பெரியதிருவடியின் வரவும் இந்த ச்லோகத்தால் தெரிவிக்கப்படுகிறது.

விஷ்ணுபக்தி—(செவிசாய்த்துக்கேட்டு) ஸூமதிநாயகரான விவேகராஜருடைய வைதாளிகன் நல்விடிவை(ஸூப்ரபாதத்தை)கோஷிக்கிறான். மேலும் சுபநிமித்தங்களும் மோக்ஷஸித்தி நெருங்குவதை ஸூசிக்கின்றன.

ஏனெனில்:—

த்ரிபுவநமிதம் ப்ராஹ்மாநந்தம் ஸமாயிக
நாகரை: ப்ரஸ்ரவஸ்யாயாரா
ப்ரஸீததி தே ச்ரேயஸே ஸ்புரதி வ முஹு
ர்தக்ஷிண வ்யத்யாஸிதஸ்புர ந
திஹ ஸந்ததி ஸித்தி ப்ரத்ய க்ஷிப்ரம்
தவ்யம் ॥

இம் மூவுலகங்களிலும் எங்கேபார்த்தாலும் சாந்திரஸம் குலாவுகிறது. அந்த ப்ரஹ்மரஸத்தில் 'யத்ர ஸர்வம் ஏகம் பவதி' என்றபடி விச்வமே ஏகரஸமாக ஆநந்தப்ரஹ்மரஸமாக அநுபவம் தொடங்குகிறது. இதற்குக்காரணம் 'ஸமாயிக நாகரை:'. உள்ளே ப்ரஹ்மத்தோடு வேறின்றி ஒன்றும் கலவி இன்பரஸம் தட்டுத்தடங்கலின்றி ஊறுகிறது. உள்ளே நாராயணரஸம் நிரம்பவே வெளியெங்கும் நாராயணமாக வ்யாப்தமான இன்பம் பெருகும். 'அந்தர் பஹிச்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:' என்ற ச்ருதி காட்டும் ரஸத்தை இங்கே விளக்குகிறார். 'ஸமாதிரஸம்' என்பது என்னவென்று இரண்டாமடியால் விளக்குகிறார். 'ப்ரஸ்ரவஸ்யாயாரா'—அமுததாரைப் பெருக்கம் போல், ச்ரேயஸே ப்ரஸீததி— புத்தி தெளிவடைகிறது. 'பவது மம பரஸ்மின் சேமுஷீ பக்திரூபா' என்ற ஸ்ரீபாஷ்ய மங்கள ச்லோக நினைவு. ஸவ்யா க்ஷிஃ- இடதுகண், முஹு: ஸ்புரதி — அடிக்கடி துடிக்கிறது. தக்ஷிண-அப்படித்துடிப்பதும், உபரி-மேலே வரும் க்ஷேமத்திற்காகத்தானென்பது, ஸ்புடம்—தெளிவே. தத:-ஆகையால், இஹ—இப்பொழுது (இந்த மாயா ப்ரபஞ்சத்திலும்), மஹதீம்ஸித்திம்—அரும்பெரும் ஸித்தி, க்ஷிப்ரம்—விரைவில், உபஸ்தாஸ்யதீம் — வரப்போகிறதென்று, மந்யே — நினைக்கிறேன். 'ஸ்புடம்' என்பது பலவிடங்களிலும் சேரும். 'உபஸ்தாஸ்யதீம்' என்பது வைதிகப்ரயோகம் என்று பாணிநி. வேதமொன்றிலேயே ஸித்திப்பதும், வேதமொன்றிலேயே அறியப்படுவதுமான வைதிக பலஸித்திக்கு ஏற்ற சாந்தஸவைதிக ப்ரயோகம். பாஷையிலும் இது மஹாகவி ப்ரயோகங்களால் ஸித்தமே. 'தம் தஸ்யா வம்ஸ நமஸ்கரோவகுண்ட' என்று ரகுவம்சம்.

ஆசைப்பட்டதை ஸாதித்துக்கொள்ள இதுவே நல்ல அவஸரம். இதுவே நல்ல லக்நம். ஆகையால்:—

வைகுண்டக்ருபயா தேவ்யா
மதீஷ்டே வ்யவஸ்திதம் ।
ப்ராயம் ஸங்கல்ப ஸூர்யாணம்
ப்ரவர்த்தயிதுமுத்ஸஹே ॥

விஷ்ணுபக்தி விஷ்ணுவின் தயாதேவியாலேயே தன்னிஷ்டமாகிய ஜீவமோக்ஷம் ஸித்திப்பதை நினைத்து அந்த தயாதேவியை ச்லாகிக்கிறாள். வைகுண்டக்ருபயா தேவ்யா— வைகுண்டரெனும் விஷ்ணுவின் க்ருபையாகிய தயாதேவியாலே. க்ருபையும் எல்லையற்றது. எல்லா வரம்புகளையும் மீறியதென்பதையும் வைகுண்ட சப்தம் கூறும். வைகுண்டருடைய க்ருபையும் வைகுண்டம். மதீஷ்டே வ்யவஸ்திதம்—என்னுடைய ஆசையை நிறைவேற்றுவதிலேயே மூர்த்தந்யமாகநிற்கும், ஸங்கல்ப ஸூர்யாணம்— ஜீவனை மோக்ஷணம் செய்ய பகவத்ஸங்கல்பமெனும் ஸூர்யனை. ப்ராயம்— அநுகூலமாக. ப்ரவர்த்தயிதும்— ப்ரவ்ருத்திக்கும்படி செய்ய, உத்ஸஹே-யத்நப்படுகிறேன்.

நான் ஜீவனை விடுவிக்க இத்தனை ஸம்ரம்பப்பட்டாலும் பகவத்க்ருபை யென்னும் அவலம்பமில்லாமல் என்னிஷ்டம் நிறைவேற முடியாது.

ஶரணாக3தரக்ஷணைகதீ3க்ஷ:
ஸமயே தத்3விபக்ஷாந் நிராகுர்வந் ।
ப்ரபு4ராயத்தே வர: க்ருபாயாம்
ஸசிவாஸ்தஸ்ய ச ஸர்வ ஏவ தே3வா: ॥

நான்மட்டும் பகவானுடைய க்ருபையை அவலம்பித்தவளென்பதில்லை; பகவானும் தன் க்ருபாதேவிக்கு வசப்பட்டவர். ப்ரபு4ராயத்தே வர: க்ருபாயாம்—பரனான ஸர்வோத்தமரான ப்ரபுவும் க்ருபைக்கு ஆயத்தமாக—அதீநமாக—இருக்கிறார். என்? அவளது தயையால் அவராலே ஸங்கல்ப்பிக்கப்பட்ட யஜ்ஞதீக்ஷை நிறைவேறவேணும். என்ன யஜ்ஞம்? முதலங்கத்தில் ப்ரஸ்தாவனையில் ‘ஶரணாக3தரக்ஷணவ்ரததீ3க்ஷிதஸ்ய’ என்று கூறியபடி சரணாகதரை ரக்ஷிப்பதையே முக்ய வ்ரதமாயும் ஒரேகார்யமாகவும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் யஜ்ஞதீக்ஷை. தீக்ஷை என்பது ஸங்கல்பம். ‘ஸம்ஸாரத்தை விட்டு நீங்கி மோக்ஷவீடுசேர ப்ரியப்பட்டு சரணமடைந்தால் அவர்களை நாங்கள் ரக்ஷிக்கிறோம்’ என்று ஸ்த்ரீபுமான்கள் சேர்ந்துசெய்யும் தீக்ஷை. ‘சரணாகதி’ என்பது நாம்செய்யும் ஆத்ம ஹவிஸ்ஸமர்ப்பணமான யாகம். நாம் எப்பொழுது இந்த ஆத்மயாகம் செய்யப்போகிறோமென்று காத்துக்கொண்டே இருந்து திவ்ய தம்பதிகள் முன்பே பொதுவில் உலகத்தையெல்லாம் ரக்ஷித்து வீடுசேர்ப்பதாகச்செய்த யாக தீக்ஷை இது. ‘ஸக்ருதே3வ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே’ என்று எவன்மித்ரபாவத்தோடு நெருங்கி வந்தாலும் அவனைக்காப்பதென்று உலகப்பொதுவில் ‘ஏதத்3வ்ரதம் மம’ என்று செய்த யஜ்ஞவ்ரத தீக்ஷை. ‘ரக்ஷைகதீ3க்ஷே’ என்ற ஸ்ரீபாஷ்யத் தொடக்கச்லோக ஸூசகம். ஸமயே - சரணம்பற்றும் ஸமயத்தில். தத்3விபக்ஷாந் நிராகுர்வந்— அங்கீகாரவிரோதிகளான பாபங்களையும், மற்ற இடையூறுகளையும் தகைத்துக்கொண்டு, க்ருபாயாம் ஆயத்தே—க்ருபைக்கு வசமாக இருக்கிறார்; அவளிட்டது சட்டமாக இருக்கிறார். ஸர்வே தே3வா: தஸ்ய ஸசிவா ஏவ—ஸகல தேவர்களும் அவருடைய மோக்ஷணஸங்கல்பத்தை யநுஸரித்து, இவர்களைப் பூஜித்து அநுகூலிக்கிறார்கள். ஸுக்ரீவாதி ஸசிவரைப்போல் சிறிது ஆக்ஷேபணையும் செய்வதில்லை. ஹநுமத்துல்ய ஸசிவராகவே இருக்கிறார்கள். ‘ஸர்வே(அ)ஸ்மை தே3வா ப3லிமாவஹந்தி’ எல்லா தேவர்களும் அவர்களை பூஜிக்கிறார்கள். என்? ‘ஆத்மா ஹ்யேஷாம் ஸ ப4வதி’ அவன் அவர்களுக்கு ஆத்மாபோல நியந்தாவான அந்தர்யாமிபோல நினைக்கப்படுகிறான். அதெப்படி? பரமாத்மாவல்லவோ அவர்களுக்கு ஆத்மா. ‘ஸ த ஆத்மாந்தர்யாம்யம்ருத:’ என்று உபதேசிக்கப்படுகிறவன். ‘ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்’ என்று அப்பரமனே ‘சரணாகதரான ஜ்ஞாநி என்னுடைய ஆத்மா’ என்றே நான் அபிமானிக்கிறேன் என்றல்லவோ பாடுகிறார். அவருக்கே ஆத்மாவானால் எங்களுக்கு ஆத்மாபோன்றவர்தானே என்று அவர்கள் எண்ணுவது.

ஆகையால் நான் அந்த தயாதேவியையே துதிசெய்துவருபவள். இப்பொழுது ஸ்ரீநிவாஸனுடைய அநுகம்பை (தயை) நேரில் ப்ரத்யக்ஷம்போல் காண்கிறாள். (கை கூப்பி) பகவான் நமக்கு அத்ருச்யராயினும், அதீந்த்ரியராயினும் அவருடைய மதியாகிய தயை (நம்மை ரக்ஷிக்க வேணுமென்கிற இச்சை) நமக்கு த்ருச்யமாகத் தெரிகிறது. கருணையேவடிவான தயை நமக்கு அத்ருச்யமாயிருப்பதில்லை என்று ரஸம்.

த்வயி ப3ஹுமதிஹீந: ஶ்ரீநிவாஸாநுகம்பே
ஜக3தி க3திமிஹாந்யாம் தே3வி! ஸம்மந்யதே ய: ।
ஸ க2லு விபு3த4ஸிந்தௌ4 ஸந்நிகர்ஷே வஹந்த்யாம்
ஶமயதி ம்ருக3த்ருஷ்ணா வீசிகாபி4: பிபாஸாம் ॥

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீராமனின் பாதுகைகள்

[ஸ்ரீ. உப. வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸதாதாசார்ய ஸ்வாமி, காஞ்சீபுரம்.]

'ப்ரஸஜ்ய ராமோபாநஹ்யௌ பாதுகே
பரதாய மஹாத்மனே ।
ஆத்மஸாம்ஸ்யம் யயோராஸீத் ப்ரீதேஷு
வஸ்துஷு' ॥ [வா-ஸ-121,]

பரதன் சித்திரகூடத்திற்குச் சென்று ஸ்ரீராமனை அயோத்திக்குத் திரும்பிவந்தும் அரசாட்சியை ஏற்றுக்கொள்ளும்படி ப்ரார்த்தித்துச் சரணமடைந்தார். ஸ்ரீராமன், முன்னர் தேவர்கள் செய்த சரணாகதிக்கு பலத்தைக் கொடுப்பதற்கு பித்ருவாக்யபரிபாலநம் அநுகூலமாய் இருந்தபடியால், அச்சமயம் திரும்பமுடியாமல் இருந்தார். தேவர்கள் கார்யத்தை நிறைவேற்றிவிட்டு அயோத்திக்கு வந்து பரதன் செய்த சரணாகதிக்கு பலத்தைக் கொடுக்கவேண்டும் என்று எண்ணினார். இதனால் ஏற்படும் காலதாமதத்தைப் பொறுக்க வேண்டி, மத்யஸ்தரும் இருவருக்கும் ஹிதகாரியுமான வஸிஷ்டர் நியமநப்படி, பரதன் ஸகலலோகங்களுக்கும் யோகக்ஷேமகாரியாயும் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்டும் ஸ்ரீராமனுக்கு ப்ரதிநிதியாயுமுள்ள அவருடைய பாதுகைகளை யாசித்தார். ஸ்ரீராமனும் தன் பாதுகைகளில் தன் சக்திவிசேஷத்தை ஸ்தாபிப்பதற்காகத் திருவடிகளால் ஏறி இறங்கி அப்பாதுகைகள் மூலமாய் ராஜ்யபரிபாலநம் செய்யும்பொருட்டு மஹாத்மாவான பரதனிடம் கொடுத்தார். பரதன் அவைகளை வணங்கி, முதலில் சத்ருஞ்ஜயம் என்னும் யானையின் தலையில் வைத்துப் பிறகு பக்தியுடன் எடுத்துத் தன் தலையில் வைத்துக்கொண்டு சத்ருக்னன், மந்திரிகள், புரோஹிதர்கள், ஸைந்யங்களுடன் சித்திரகூடத்திலிருந்து அயோத்திக்கு வந்தார். அங்கிருந்து நந்திக்ராமத்திற்குப்போய் புரோஹிதர்களிடமும் ப்ரஜைகளிடமும் "என் ஸஹோதரன் ராஜ்யத்தை ந்யாஸமாகக் கொடுத்திருக்கிறார். அதைத் தர்மம் தவறாமல் பரிபாலிப்பதற்கு வேண்டிய ஜ்ஞாநம் ந்யாஸத்திற்கு ஸமமாயும் ப்ரதிநிதியாயுமுள்ள பாதுகைகளின் ஸந்நிதியிலிருந்துதான் எனக்குக் கிடைக்கும். அவர் திரும்பிவந்த பிறகு அவருடைய திருவடிகளில் பாதுகைகளைப் பொருத்தி அவருக்கு ராஜ்யத்தைக் கொடுத்துப் பாபங்களைப்போக்கிக்கொள்வேன். ராகவனுக்குப் பட்டாபிஷேகம் நடந்தால் ஜநங்கள் ஆநந்தமடைவார்கள். ராஜ்யபரிபாலநத்தைக் காட்டிலும் நான்கு மடங்கு கீர்த்தியும் ப்ரீதியும் எனக்குக் கிடைக்கும்" என்று சொன்னார். பிறகு மரவுரி ஜடைகளுடன் முனிவேஷத்தோடு நந்திக்ராமத்தில் சத்ருக்னன் முதலியவர்களுடன் வஸித்துக்கொண்டு இக்ஷ்வாகுகுலஸிம்ஹாஸநத்தில் பாதுகைகளுக்குப் பட்டாபிஷேகம் செய்து அவைகளின் அடிமையாய், அவைகளை முன்னிட்டு, ராஜ்யநிர்வாஹஸமயத்தில் நேரும் கார்யங்கள், கிடைக்கும் உயர்ந்த காணிக்கைகள் எல்லாவற்றையும் பாதுகாஸந்நிதியில் விஜ்ஞாபித்து, முறைப்படி நடந்துகொண்டார். இவ்வாறு வால்மீகிராமாயணத்தில் அயோத்தியாகாண்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. யுத்தகாண்டத்தில் 130-வது ஸர்க்கத்தில் தர்மஜ்ஞரான பரதன் நரச்ரேஷ்டரான ஸ்ரீராமனுக்குத் தானே அந்தப் பாதுகைகளை எடுத்துத் திருவடிகளில் பொருத்தினார் என்று கூறப்பட்டிருக்கிறது.

அயோத்தியாகாண்டத்தில் 112-வது ஸர்க்கத்தில்—

'அதிரோஹார்ய! பாதாப்யாம் பாதுகே
ஹேமபூஷிதே । ஏதே ஹி ஸர்வலோகஸ்ய
யோகக்ஷேமம் விதாஸ்யத: ॥'

என்ற ச்லோகத்திற்குத் திலகவ்யாக்யாநத்தில் 'ஏதே- உடஜ ஸந்நிஹிதே' (ஆச்ரமத்தில்

உள்ள) என்று விவரணம் காணப்படுகிறது. அங்கேயே 113-வது ஸர்க்கத்தில்—

‘ஹதெ த்வெ ச ஸம்ஸ்ருஷ்டெ பாதுகெ ஹெமபூஷிதெ । ஶுபெ அயோத்யாயாம் ஹெமா ப்ராஜ!யொ ஶக்தெஷ்ஹெரத வா’ என்ற ச்லோகத்திற்குக் கோவிந்தராஜரின் டீகையில், ‘ஹெம பூஷிதெ’ இத்யநேந ராமாய ப்ரீத்யா ஸமர்ப்பயிதும் ஹிரண்மயதயா நிர்மாய நகராத் ஆநீதெ இதி கம்யதெ’ (ராமனுக்குப் ப்ரீதியுடன் ஸமர்ப்பிப்பதற்காகப் புதிதாய்ச் செய்து நகரத்திலிருந்து பரதனால் கொண்டு வரப்பட்டவை என்று தெரிகிறது) என்று இருக்கிறது. இவ்விரண்டு உரைகளிலிருந்து ஸ்ரீராமன் அயோத்தியிலிருந்து சித்ரகூடம் வரையில் தரிக்கப்பட்டவையும் அந்த ஸமயத்தில் ஆச்ரமத்தில் இருந்தவையுமான தன் பாதுகைகளைப் பரதனுக்குக் கொடுத்தாரா? அல்லது அப்பொழுதுதான் பரதன் கொண்டு வந்த பாதுகைகளை அவருக்குக் கொடுத்தாரா? என்று ஸம்சயம் கிளம்புகிறது. இவைகளில் முதல் கக்ஷிதான் ராமாயணம் முதலியவைகளுக்கு ஒத்தது. ஏனெனில் பாலகாண்டத்தில் முதல் ஸர்க்கத்தில்—

‘பாதுகெ சாஸ்ய ராஜ்யாய ந்யாஸம் தத்வா புந: புந: । நிவர்த்தயாமாஸ ததொ பரதம் பரதாக்ரஜ: ॥’

என்றும், அயோத்யாகாண்டத்தில் 115-வது ஸர்க்கத்தில்

‘ஸ தத்ராஜ்யம் மஹாபாஹு: ஸ்த்வா ஸம்ந்யாஸவத்தயா । யொஜயாமாஸ வைதெஹ பாதுகெ ஹெமபூஷிதெ ॥ பரத: ஶிரஸா க்ருத்வா ஸம்ந்யாஸம் பாதுகெ தத: । ப்ராதா ஹி மயி ஸாந்யாஸொ நிக்ஷிப்த: ஸௌஹ்ருதாதயம் ॥ ராகவாய ச ஸம்ந்யாஸம் தகெவமெ பரபாதுகெ । ராஜ்யம் செதமயொத்யாம் ச யாசிதவாயொ ஸமாநி ச ॥’

என்றும் ஸூக்திகள் இருக்கின்றன. இவ்விடத்தில் பரதனிடம் ராஜ்யத்தையும் பாதுகைகளையும் ந்யாஸமாகவும் ந்யாஸதுல்யமாகவும் கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறது. ந்யாஸம் அல்லது நிக்ஷேபம் என்பது, இன்னொரு ஸமயத்தில் பெற்றுக்கொள்வதற்காக நம்பிக்கையுள்ள மநுஷ்யனிடத்தில் காப்பாற்றி வைக்கும்படி ஒரு வஸ்துவைக் கொடுத்துவைப்பது என்று 115-வது ஸர்க்கத்தில் திலகவ்யாக்யாநம். இதனால் ராமன், அயோத்தியிலிருந்து சித்திரகூடம் வரையில் ஸஞ்சரிக்கும்பொழுது தன் திருவடித்தாமரைகளைச் சுமந்த தன்னுடைய சொந்தப் பாதரக்ஷைகளை, அவைகளை முன்னிட்டுக்கொண்டு ராஜ்யபரிபாலநம் செய்து பதினான்காவது வருஷம் முடிந்தபிறகு தான் அயோத்திக்குத் திரும்பிவரும்பொழுது தன்னிடம் திருப்பித்தருவதற்காக, பரதனிடம் கொடுத்தார் என்று தெரியவருகிறது. அவைகள் ஸ்ரீராமனுக்குச் சொந்தமில்லாமல் பரதனால் கொண்டுவரப்பட்டிருந்தால், யுத்தகாண்டத்தில் பதினான்கு வருஷங்கள் முடிந்து நந்திக்ராமத்திற்கு வந்துசேர்ந்த ராமனுடைய திருவடிகளில் பரதன் அவைகளைப் பொருத்தினார் என்று சொல்லுவதும், அடிக்கடி ந்யாஸமைப்பத்தை உபயோகிப்பதும், அங்கங்கே ‘உன்னுடைய பாதுகைகள்’ ‘ராமனுடைய பாதுகைகளெ’ன்ற வார்த்தைகள் சரியாக ஒத்துவராது.

மேலும், பாஹ்யப்பட்டால் ‘ஏ பாதுகையே! சேஷனை லக்ஷ்மணன் பரதன் தலையில் இருக்கும் உன்னைத் தன்னுடைய சரீரமாகவே இருந்தும் (சேஷாவதாரமாய் இருந்தும்) தூரத்திலிருந்து வணங்கினார். இதில் என்ன ஆச்சர்யம்? ரங்கநாதனே தசரதபுத்திரனாயும் ஸர்வதா அவஹிதனாயும் இருந்துகொண்டு தன்னையே ஸேவித்துக்கொண்டாரே’ என்று சேஷபத்ததியில் சொல்லப்பட்ட மாதிரி ஆராத்யரான அர்ச்சாமூர்த்தி ஸ்ரீரங்கநாதனுக்கும் ஆராதகரான விபவமூர்த்தி ஸ்ரீராமனுக்கும் பேதமில்லாமையால் ராமபாதுகைகளின் கார்யத்தை ரங்கநாதபாதுகைகளுடையதாகப் பெரும்பாலும் வர்ணிப்பதாயும், கவிதார்க்கிக கேஸரியான ஸ்ரீமத்வேங்கடநாதனால் அருளிச் செய்யப்பட்டதாயும் தோஷமற்று மனத்தைக் கவரும் 1008-ச்லோகங்கள் கொண்டதுமான ஸ்ரீரங்கநாத பாதுகாஸஹஸ்ரத்தில் அநேக

ச்லோகங்களால், ராமன் அயோத்தியிலிருந்து சித்திரகூடம்வரையில் தன் திருவடிகளை ரக்ஷித்துவந்த தன்னுடைய ஸொந்தபாதுகைகளைப் பரதன்பொருட்டு ராஜ்யபரிபாலநத்திற்காக ந்யாஸமாகக் கொடுத்தார் என்பது உறுதியாகிறது.

ஸமர்ப்பணபத்ததியில் முதல் ச்லோகம்—

'ஹஜாஶ: வாஷுகே யாஹ்யாம் ஹரதஸ்யா
ஹ்ர ஜஹ்ஷா। ப்ராய: ப்ரதிப்ரயாணாய ப்ராஸ்மா
நிகஶக்ஷ்வயஶ ।'

என்பது. இதன் ஸம்ஸ்க்ருதவ்யாக்யாநத்தில் 'லோகத்தில் ப்ரயாணம் செய்பவர்கள் ப்ரயாணத்தில் விளம்பம் ஏற்பட்டால் கத்தி முதலியதை வேறு இடத்தில் கொண்டுவைப்பார்கள். அதைப்போல் ராமனும் மறுபடியும் வரப்போகிறவராய்ப் பரதனிடத்தில் தன் பாதுகையை வைத்தார் என்று அர்த்தம்' என்று அபிப்ராயம் வர்ணிக்கப்பட்டது. அதே பத்ததியில்—

'௱ாஜ்யம் விஹாய ௱வுவம்ஶஹீவதீநாம்
வளா௱ாம்ஸ்து வாஷ௱விகாநு வ்ரயிவீம் வ
௱கதாழ॥ க்வாஶேவ ஹஷே வ௱ணாவநி! ஸம்
ப்ரயாஸ்யநு குஶ்வத ப்ரயஶ௱தா௱கொஸ
ஹெந்ரு:॥'

என்று இரண்டாவது ச்லோகம். இதன் தமிழ் வ்யாக்யாநததில்—

'ஸ்ரீராமன் காட்டிலிருக்கும்பொழுது பரதன் அவரிடத்திலிருந்து எந்தப் பாதுகைகளைப் பெற்று அயோத்திக்குச் சென்றாரோ அவை ஸ்ரீராமனிடமே இருந்தனவா? அல்லது பரதன் அயோத்தியிலிருந்து அவைகளை எடுத்துக்கொண்டு சித்திரகூடத்திற்குப் போனாரா? என்று ஸந்தேஹம் வந்தால் அதை நிவர்த்திப்பதன் பொருட்டு ஸ்ரீதேசிகன் இந்த ஸமர்ப்பணபத்ததியின் இரண்டாவது ச்லோகத்தில் ஸ்ரீராமன் பாதுகைகளைத் தரித்துக்கொண்டே வநத்திற்குச் சென்றார் என்று சொன்னார். பரதன் ராமனிடமிருந்து பெற்றுக்கொள்ளும்பொழுது 'ஊயிரொஹாயவஷாஹ்யாம்' என்று திருவடிகளால் பாதுகைகளில் ஏறும்படி ப்ரார்த்தித்து ஏறினபிறகு திருவடிகளிலிருந்து அவைகளைத் தன்னுடைய தலையில் பெற்றுக்கொண்டார்' என்று கூறப்பட்டிருக்கிறது.

'ப்ராப்தே ப்ரயாணஸஶயெ ஶணிவாஷ
௱கெக்ஷ! வளா௱ாநவெக்ஷ்ய ஹவதீ கா௱ண
ப்ஶாவாநு। ஶஜுப்ரணாஷஶவா௱ விநி
வதநாயம் ௱ாஶம் வ ஷ ஹ்ர ஹண
வவெவயாவதெவ॥'

என்பது அங்கேயே மூன்றாவது ச்லோகம். இங்கே ஸம்ஸ்க்ருதவ்யாக்யாநத்தில் 'விநிவதநாயழ— பரதனுக்குக்கொடுத்து என்னைத்திருப்பியனுப்புவீராக என்ற விஷயத்தை.......... ஆகவே ராமன் அதைப் பரதனுக்குக் கொடுத்தார் என்பது கருத்து. சலங்கை ஶப்தத்துடன் ராமனுடைய திருவடி பாதுகையைப் பிடித்துக்கொண்டதைப் பாதுகை தன்னைத் திருப்புவதற்காகத் திருவடியைப் பிடித்துக்கொண்டதாக உத்ப்ரேக்ஷித்திருப்பதால் 'ஸ்வ௱வெவாதெவக்ஷா' என்று வ்யாக்யாநம் செய்யப்பட்டது.

'லாஶாதூந: ப்ரதிவஷம் ஶணிவாஷ௱கெக்ஷ!
விஶ்வம்ஹ௱ஸ்ய வஹநெந வரீக்ஷிதாம்
க்வாழ। விஶ்வஸ்ய ஷெவி வஹநெ விநிவெஶ
யிஷ்யநு விஸ்வ்ய வஷ ஹ௱தா ஹவதீம்
யயாவெ॥

வாஷாவநி ப்ரஹவதா ஜமதாம் த்ரயா
ணாம் ௱ாஶாஷவி கவயிகா நியதா ப்ரஹா
வாக। நொவெக்ஷயம்ந ஹ௱தஸ்ய தஶேவ
விஶ்வொ: ப்ரக்ருயநம் வஶிவணம் ஹவதீ
ஹவித்ரீ॥

நியதயி௱வொஹ காஶநாயெயஶக்திம்
நிஜவ௱ணஸ௱ொஜெ ஶக்திாயாதகாஶ:।
ஸகயஶிதாயா க்வாம் ந்யஸ்ய ௱ாஶொ விஜ
ஹெ ஷ்ரஷவதவிதஹஹெ ஷண்காா௱
ண்யஹாஶெ॥'

இவை ஸமர்ப்பணபத்ததியில் 5, 8, 16-வது ச்லோகங்கள். இந்த ச்லோகங்ளில் முறையே, ராமனை அடிக்கடி சுமப்பதால் பாதுகைகள் பரீக்ஷிக்கப்பட்டனவென்றும், அவைகள் ராமன் திரும்பிவரப்போவதில் நம்பிக்கையுண்டா

க்கக்கூடிய அடகுப்பொருள்களென்றும், பாதுகைகளைக்கொடுக்கும்ஸமயத்தில் தன் திருவடித் தாமரைகளில் அவைகளின் சக்தியை ஏற்றிக் கொள்ளாவிடில் ராமன் பாதங்களால் பாறைகள் நிரம்பிய தண்டகாரண்யத்தில் ஸஞ்சாரம் செய்யமுடியாதென்றும் சொல்லியிருக்கிறது.

'[illegible]'

'[illegible]'

இவை ப்ரதிப்ரஸ்தான பத்ததியில் 5, 7-வது ச்லோகங்கள். இவைகளால் முறையே, திரும்புவதற்கு முன்பு பூமியில் பாதரக்ஷைகளுடன் கூடிய திருவடிகளின் ஸ்பர்சம், தண்டகாரண்யத்திற்குப்போகும் ஸமயத்தில் ஜகத்தை ரக்ஷிப்பதற்காக பாதுகைகள் ராமனின் திருவடித் தாமரைகளை விட்டுப்பிரிவது, இவை சொல்லப்படுகின்றன.

'[illegible]'

[illegible]

இவை அதிகாரபரிக்ரஹ பத்ததியில் 16, 39-வது ச்லோகங்கள்.

[illegible]'

இவை அபிஷேக பத்ததியில் 4, 28-வது ச்லோகங்கள்.

'[illegible]'

இது ஸஞ்சார பத்ததியில் முதல் ச்லோகம். இவைகளால் முறையே, பாதுகைகள் அநேகப்ரகாரமான தங்கள் லீலைகளைப் புறக்கணித்து அசஞ்சலமாய் ஒரேநிலையில் இருப்பதாகிய ஒரு அபூர்வமான வ்ரதத்தை யநுஷ்டித்ததும், பரதன் அவைகளைத் திருப்பிக் கொண்டுவந்ததால் ராமனுடன் தண்டகாரண்யம் செல்லுவதைவிட்டதும், கானகத்திலிருந்து திரும்பியதால் லக்ஷ்மணனையும் ராஜ்யாபிஷேகத்தை யங்கீகரித்ததால் பரதனையும் தோற்கடித்ததையும், ராமனுடைய திருவடித்தாமரைகளின் ஸ்பர்சஸௌக்யத்தை விட்டுவிட்டு 14 வருஷங்கள் ராஜ்யபாரத்தை வஹித்ததும், தர்ப்பங்கள் முட்கள் இவைகளை நசுக்குதல் பாதுகைகளின் வியாபாரமாய் இருந்ததும் சொல்லப்படுகின்றன. முதல்கோடிக்கு ஸாதகமான மற்ற பாதுகாஸஹஸ்ரச்லோகங்கள் விரிவுக்கஞ்சி இங்கு காண்பிக்கப்படவில்லை. அபயப்ரதாநஸாரத்தில் பரதசரணாகதிக்கு பலத்தை நிரூபிக்கும் தருணத்தில் நிகமாந்ததேசிகனால் ப்ரமாணமாக உதாஹரிக்கப்பட்ட 'மரவடியைத் தம்பிக்கு வான்பணையம் வைத்துப்போய் வானோர் வாழ' என்கிற பெரியாழ்வாருடைய ஸூக்தியும் பாதுகாந்யாஸவிஷயத்தில் ப்ரமாணமாக அநுஸந்திக்கத்தக்கது. '[illegible]' என்கிற மந்த்ரத்தைச் சொல்லிப் பாதுகைகளை ஒரே ஸமயத்தில் தரிக்கும்படி ஸ்நாநகர்ம ப்ரகா

ணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. வடிவ மெடுத்த தர்மமாகச்சொல்லப்பட்ட ஸ்ரீராமன் க்ருஹஸ்தர். ஸீதையுடன் கானகம் சென்று அயோத்திக்குத்திரும்பிவந்து பட்டாபிஷேகம் செய்துகொண்டார். பிறகு குசலவர்கள் ஜநித்து வால்மீகிசிஷ்யர்களாகி ஸ்ரீராமன் ஸந்நிதியில் அச்வமேதமஹாமணிமண்டபத்தில் ஸ்ரீராமாயணத்தைப் பாடியதாகக் கதை யிருக்கிறது. ஆகையால் ஸ்ரீராமன் வாநப்ரஸ்தர் அல்ல. சக்ரவர்த்தித்திருமகனுனதால் அவருடைய பாதுகைகள் தங்கப்பாதுகைகளாக யிருப்பதில் விரோதமில்லை. எனவே நகரத்திலிருந்து பரதனுல் சித்ரகூடத்திற்குக் கொண்டுவரப்பட்டும் அவருடைய ப்ரார்த்தனையின்பேரில் ராமனுல் ஏறிக்கொடுக்கப்பட்டுமுள்ள பாதுகைகளுக்கு அவரால் நந்திக்ராமத்தில் பட்டாபிஷேகம் நடத்தப்பட்டது என்னும் வாதம் ஸரியன்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

நற்போது போக்கு

[ஸ்ரீ. உப. ஒரகடம் K. ஸுதர்சனுசார்யர், ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.]

1994..

ஸ்ரீபராங்குச நாயகி தலைவனைப் பிரிந்து நோவுபடுகிறுள். அப்போது அவளுடைய தோழி, 'தண்ணந்துழாய்த் தாராயினும் தழையாயினும் தண்கொம்பதாயினும் கீழ்வேராயினும் நின்ற மண்ணுயினுங் கொண்டு வீசுமினே' [திருத்துழாய் மணம் பட்டவாறே இவள் நோய் நீங்கும்] என்று அதற்குப் பரிஹாரம் சொல்ல, அந்நறுமணம் படுதற்கு முன்னமே 'திருத்துழாய்' என்ற திருநாமத்தைக் கேட்டபோதே மோஹம் தெளிந்த நாயகி, தலைவனின் பிரிவாற்றுமையைத் தரிக்கமாட்டாது அவன் வரவை அறிந்துவருவதற்கு வண்டைத் தூதுவிடுகிறுள். இவள் விட்ட தூதுக்கு அவன் சிறிதுகாலம் அவளிடம் வந்து சேர்ந்திருந்து மீண்டும் அவளைப்பிரியநினைத்து, பிரிந்தால் தான் வருமளவும் அவள் ஜீவித்திருப்பதற்காக, 'நம்மிடமத்யந்தம்ப்ரீத்யதிசயம்வாய்ந்த இந்நாயகன் நம்மைவிட்டுப்பிரிந்தால் நெடுநேரம் தாமஸிக்கமாட்டான்; சொன்ன காலத்தில் காலந்தவருதபடி வருவன்' என்ற எண்ணம் அவள் நெஞ்சில் படும்படியாகத் தலைவியைக் கொண்டாடிப் பேசுகிறுன்.

நலம் பாராட்டு

[தலைவியின் குணநலன்களைப் பாராட்டிப் பேசுதல்]

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைமகன், தலைமகள் கேட்ப, வண்டுகளை நோக்கி, 'வண்டுகளே! இங்கே வாருங்கள், நான் உங்களை ஒன்று கேட்கிறேன். நீங்கள் எவ்விடத்தும் சென்று, நீர்ப்பூ நிலப்பூ கோட்டுப்பூ என்றிப்படி வெவ்வேறு வகைப்பட்ட பூக்களைக் கண்டறிந்திருக்கிறீர்கள். அவைகளிலுள்ள தேனைக் குடித்துப் பல்லிடங்களிலும் திரிந்திருக்கிறீர்கள். உங்களில் யாரேனும், ஒப்பற்ற வராஹவடிவமாய்ப் பூமியைக் கோட்டாற் குத்தி விரித்தருளின எம்பெருமானது பரமபதத்தை ஒத்த இந்நாயகியினது கூந்தலில் இயற்கையாயமைந்துள்ள நறுமணத்தை ஒத்த பரிமளமுள்ள மலர்களை, நீங்கள் பறந்து ஸஞ்சரிக்குமிடங்களில் எங்கேயாவது கண்டதுண்டா? சொல்லுங்கள்' என்று கூந்தலின் இயற்கை நறுமணத்தைப் பேசுமுகத்தால் தனது அன்பை வெளிப்படுத்தித் தலைமகளைப் புகழ்ந்து அவள்பால் தனக்குள்ள காதலை வெளிப்படுத்துகிறுன். [உத்தமஜாதி ஸ்த்ரீகளின் கூந்தலுக்கு மலர் நறுமணத் தைலம் முதலியவற்றின் சேர்க்கையால் செயற்கை மணம் உண்டாவதன்றி, இயற்கை நறுமணமுமுண்டு என்பது ஸித்தாந்தம்.]

'வண்டுகளோ வம்மின் நீர்ப்பூ நிலப்பூ
மரத்திலொண்பூ

உண்டுகளித்துழல்வீர்க் கொன்றுரைக்கியம்;
ஏனமொன்றாய்
மண்டுகளாடி வைகுந்தமன்னாள் குழல்வாய்
விரைபோல்
விண்டு கள்வாரும் மலருளவோ நும் விய
லிடத்தே.
(திருவிருத்தம்–55)

வ்யூஹாவதாரத்தின் பெருமையும், ராம க்ருஷ்ணத்யவதாரங்களான விபவாவதாரத்தின் பெருமையும், வேதாந்தப்ரதிபாத்யனான ஸ்ரீபரமபதநாதன் பெருமையும் அநுஸ்யூதமாய் அநுபவித்து ஆநந்தித்து எவ்விடத்தும் தடையின்றிச் செல்லும் ஸாரக்ராஹிகளே! உங்கட்கு ஒன்று சொல்லுகிறோம். ஸ்ரீவைகுண்டம்போல் பேராநந்தம் தரவல்ல இவ்வாழ்வாரின் அசஞ்சலமான பக்தியைப்போன்ற பக்தி வேறு எங்கேனும் நீவிர் கண்டதுண்டா? என்பது இப்பாசுரத்தின் உள்ளுறைபொருள்.

இத்திருவிருத்தப் பாசுரத்துக் கிணங்க, குறுந்தொகையெனும் சங்கநூலில் காணப்படும் செய்யுளும் அதன் வரலாற்று விளக்கமும்: —

தருமி என்னும் ஆதிசைவன் மதுரையிற் கோயில்கொண்டுள்ள ஸ்ரீஸோமஸுந்தரர்க்கு ஆலயபூஜை செய்பவன். அவன், தான் மணம் செய்துகொள்ளுதற்குப் பெருஞ்செல்வம் வேண்டுமாறு அப்பெருமானது ஆலயம் நண்ணி இறைவனைப் பலபடி ஏத்தித் துதித்தான். அதைக்கேட்ட மங்கை பாகன் ஒரு பாவினை அருள, அதனைத் தருமி சங்கப்புலவர்களுக்குக் காட்ட அவர்கள் அப்பாவின் சொற்சுவை பொருட்சுவைகளைக்கண்டுவியந்து, வங்கிய சூடாமணி யென்னும் பாண்டியனுக்கு இதன் நயங்களை விளக்கினர். அவ்வரசன், ‘மகளிர் கூந்தலில் இயற்கை மணமுண்டு’ என்ற கருத்துடையனாதலின், அக்கருத்திற்கேற்ப இச்செய்யுள் விளங்குதல் கண்டு, ஆயிரம் பொன் பொதிந்த கிழியை அறுத்துப் பெற்றுக் கொள்ளுமாறு பணித்தான். அச்சமயம் நக்கீரன் என்ற புலவன் தடுத்து, ‘இச்செய்யுள் குற்றமுடையது’ என்ன, தருமி தாங்கொணாத் துயருற்று இறைவனிடம் சென்று முறையிட்டுக்கொண்டான். அப்போது பரமன் ஒரு புலவனுருக்கொண்டு வந்து நக்கீரன்பால் சினந்து, அவனைத் தனது நெற்றிக்கண்ணால் நோக்க, அவன் அஞ்சாது ‘நீ நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றங் குற்றமே’ என்று சொல்லி, நெற்றிக்கண்ணின் வெப்பம் தாங்காது பொற்றாமரைக் குளத்தில் விழுந்தான். பின்னர், கபிலர் பரணர் முதலிய கடைச்சங்கப் புலவர்களின் வேண்டுகோட்கிணங்கி, இறையனார் நக்கீரனைக் காத்தருளினார். பின்னர் பாண்டியன் தருமிக்குக் கிழியுடன் பரிசில் பலவும் தந்தருளினான். இவ்வரலாறு திருவிளையாடற்புராணத்தில், தருமிக்குப் பொற்கிழியளித்த படலம் கீரனைக் கரையேற்றிய படலம் ஆகிய இவ்விரண்டிலும் பரக்கக் காணப்படுகிறது.

இறையனார் தருமிக்களித்த சுவைமிக்க பா பின்வருமாறு.—

[இயற்கைப் புணர்ச்சிக்கண் தலைவியின் கூந்தல் இயற்கை மணமுடையதென்பதைத் தலைவன் வண்டை வினவுதல் வாயிலாகப் புலப்படுத்தி நலம் பாராட்டியது.]

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறி யெயிற்று அரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீயறியும் பூவே.

[இதன்பொருள்] பூக்களில் உள்ள மகரந்தத்தை ஆராய்ந்து தேனை உண்கின்ற வாழ்க்கையையுடைய வண்டே! நீ என்னுடைய நிலத்தில் வாழும் வண்டாதலின் நான் விரும்புவதையே கூறாமல் நீ கண்கூடாக அறிந்ததையே சொல். நீ ஆராய்ந்தறியும் மலர்களில், என்னிடம் மிகுந்த நட்பையும் மயில்போன்ற மென்மையான சாயலும், நெருங்கிய பற்களையுமுடைய இப்பெண்ணின் கூந்தலைப்போல் நறுமணமுள்ள பூக்கள் இருக்கின்றனவா?

(குறுந்தொகை—2)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

உபயவேதாந்த ஜககண்ட்யம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A., B. L., அட்வோகேட், திருச்சி.]

அந்தர்யாமி ப்ராஹ்மணத்தையும் கீதாவிபூத்யத்யாயங்களையும் குறிப்பதால் 'நாராயண பரம் ப்ரஹ்ம தத்த்வம் நாராயண: பர:' என்றபடி பரப்ரஹ்மம் நாராயணனே என்பதைப் 'பர' ஶப்தத்தால் ஸூசிக்கிறார். 'வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே' என்று அடுத்த திருவாய்மொழியின் முடிவிலும் இத் திருநாமத்தை விசேஷித்துக் குறித்து அவனுடைய கழல் சேருதலே பரமப்ராப்யம்; அதுவே த்ருடமான அநாவ்ருத்தமான மோக்ஷம் என்று ஸாதிக்கப்போகிறார். இத் திருவாய்மொழி ஸஹஸ்ரமும் 'பரனடி' மேலேயே பாடப்படுவது.

'குருகூர்' என்பதால் குருகுகளான தௌத்யம் செய்யும் இரண்டுபக்ஷங்களையுடைய ஆசார்யபக்ஷிகள் நிரம்பிய ஊர் என்பதும் வ்யஞ்சிக்கப்படுகிறது. நமக்குப் புருஷகாரம் செய்யும் ஹம்ஸாசார் ஆழ்வார். அவ்வாழ்வார் ஊர் குருகூர். கொக்கினங்கள், குருகினங்கள், பூவைகள், நாரைகள் முதலியன தாம் பாடும் புளியடிக்கருகே யில்லாவிடில் ஆயிரம் பாசுரங்கள் பாடுமளவும் எப்படித் தரிக்கமுடியும்? எப்படி ஆயிரமும் பாடமுடியும்? ஆயிரம் பாடுவதற்குவேண்டிய தௌத்யஸௌகர்யங்கள் இருப்பதைக் குருகூர் என்பதால் ஸூசிக்கிறார் போலும். இவர் தம்முடைய சித்தத்தை இங்கே அநுஸந்தானம் செய்கிறார். கூடமான ஸ்வபாவமுடையதாய் ப்ரஸித்தமான இந்த்ரியாதிகள் பேரிலும் காமாதிகள்பேரிலும் கோபமிருப்பது குணமேயாகும். ஆசார்யருக்கு அக்குணமே சிறந்ததாகும். 'ந மாயா மாயிநாம் ஶாஸ்த்ரீ வ ஹாவ்யேவ வி மாயதி । ப்ரக்ருதிம் யாந்தி ஹ்ருஷீகாநி க்ஷிப்ரம் ஶுகா நியம்யதாம் ।' என்று மஹாபாரதத்தில் சிசுபாலன் பீஷ்மரை நிந்தித்தான். பாடும் கவியாசிரியர் தாம் பாடும் உபதேசங்களைத் தாமே முதலில் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்து பிறகுதான் அவர் உபதேசிக்கத் தொடங்க வேணும். சடகோபன் என்கிற திருநாமம் இவருக்குக் குணத்தைப் பொருத்த நாமம். இத் திருநாமமே இவருக்கு இக் குணபூர்த்தியை விளக்குகிறது. 'ஶமதமாதிகுணபூர்த்தி' என்று ரத்நாவளி இந்த ரஸத்தைக் காட்டிற்று. 'ந மாயிநாம் ஶாஸ்த்ரீ' என்கிற நிந்தைக்கு இக்கவி விஷயமல்லவென்பதை அது வ்யஞ்ஜநம் செய்கிறது. 'ஸ்வயமாசரதே யஸ்து ஆசார்ய: ஸ உச்யதே' என்கிற உபதேஷ்ட்ராசார்ய லக்ஷண பூர்த்தியையும் காட்டுகிறது.

'குருகூர்ச்சடகோபன் சொல்' என்று தம்மையே ப்ரகாசப்படுத்திக் கொள்ளலாமோ? 'நீர் நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து' என்று பாடப்போகிறவரல்லவோ? என்று சங்கித்து, 'வால்மீகிர்பகவாந் ருஷி:' என்று, ராமபட்டாபிஷேகமானதும் ராமசரிதம் முழுவதையும் இயற்றியதாக ராமாயணத் தொடக்கத்தில் கூறப்பட்டிருப்பதுபோல ஆப்திக்கு உடலாக அருளிச்செய்ததாக ஈடு ஸாதித்தது. மாயக் கவியும் ஆழ்வார் நெஞ்சு நிறையப் புகுந்து பாடுவித்து, சடகோபன் சொல்லான க்ரந்தம் இது. சொல்லின் உச்சாரணமே சடகோபனுடையது. 'தஸ்ய தத்வசநம் ஶ்ருத்வா ஸ ஸம்யக் ப்ராணதாநதா வாக்யவிஶாரத:' என்று வால்மீகி, பதங்களும் ஸந்தி ஸமாஸங்களும் மதுரமானபொருள்களும் எல்லாம் தன்னிடம் வந்து தான் உச்சரித்ததுமட்டுமே, மூகன்போன்ற முநியாகிய தன்னை வாசால

ராகச் செய்வித்தது ப்ரஹ்மநாரதகுருக்கள் ராமன் இவர்களுடைய மஹிமையே யென்றும், 'ஸுநிபுணீதம்' என்று காட்டியபடி ஆழ்வாரும் 'சடகோபன் சொல்' என்கிறார்போலும். அந்த ச்லோகத்தில் உள்ளபடி இங்கும், 'நிரனிறை' என்பதால் இங்கே 'சொல்' என்பதற்குப் பிறகு பாடுவதும் கவனிக்கத்தக்கது. 'மூங்கையான் பேசலுற்றேன்' என்று கம்பநாடர் 'ஸுநிபுணீதம்' என்றவிடத்தில் முநி யென்னும் பதத்திற்கு கவி ஹ்ருதயத்தை விளக்குகிறார்போலும். 'நிரைநிறை' என்றபோது சப்தங்களும் நிறைந்து அர்த்தங்களும் புஷ்கலமாயிருக்கை என்று ஈடு. 'சொல்' என்று இதற்கு முன்னுள்ள பதத்திற்கு உச்சரித்தது மட்டுமென்று பொருள்கொள்வது ரஸமே. அப்படிச்சொல்வதில் பௌநருக்த்யமில்லாமலிருக்கும். 'நிரன் நிறை' என்று பிரித்து 'நேரே நிறுத்தப்படுகை' என்று பொருள் காட்டி, 'வ்ருத்தேநேஷ்வாபிநிஹிதம்' 'பாதபத்தோக்ஷரஸம:' என்ற ராமாயண ச்லோக லக்ஷணங்கள் பூர்ணமாய் இருப்பதும் காட்டப்பட்டது. 'ஸமம்' என்பதற்கு 'நேர்' என்று பொருள். 'நிறை' என்பதற்கு க்ருத்ஸ்நம் பூர்ணம் என்கிற பொருளைக்கொண்டு 'காவ்யம் ராமாயணம் க்ருத்ஸ்நம் ஸீதாயாஸ் சரிதம் மஹத்' என்கிற ச்லோகஸூசநமும் ஈடு முதலியவற்றில் காட்டப்பட்டது. 'ந தே வாகந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி' என்றபடி இவர் காவ்யமும் பொய்யில் பாடல்கள். 'ஆயிரம்' என்று ஸங்கல்பிப்பது ஸாம சாகையின் ஸஹஸ்ரஸங்கையையும்பற்றுவதாகும், 'வேதாநாம் ஸாமவேதோஸ்மி' என்று கீதை. இது அந்தமாயக்கவியின் காவ்யம். ஸஹஸ்ரநாமஸங்க்யையையும் பற்றுவதாகும். 'நாமங்கள் ஆயிரம்' என்று இவ்வாயிரத்தைக் குறிப்பதால் இக்கருத்து வெளியாகிறது. 'ஸஹஸ்ரசீர்ஷா...... ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்' 'ஸஹஸ்ரமூர்த்தயே ஸஹஸ்ரபாதாக்ஷி சிரோரு பாஹவே' 'ஸஹஸ்ரநாம்நே' முதலிய ச்ருதி ஸ்ம்ருதிகளால் ஸஹஸ்ரஸங்க்யைக்கு பகவான் விஷயத்தில் ஆநுரூப்யமுண்டு.

'ஆயிரத் திவைபத்தும் வீடே' என்னுமிடத்தில் 'வீடே' என்பதற்குஸமர்ப்பித மென்றும் பொருளுரைக்கப்பட்டது. 'வீடே' என்பது 'விடுகை' எனும் ஸாதநத்தையும் பலமாகிய மோக்ஷ வீட்டையும் சொல்லும். இப்பத்துமே மோக்ஷத்தை விளைவிக்கவல்லது. இதுவே ஸாதநமும் மோக்ஷத்தைப்போல் அநுபாவ்யமு மாகும். 'மயர்வேதும் வாராமல் மானிடரை வாழ்விக்கு மாறன்சொல் வேராகவே விளையும் வீடு' என்ற மாறன் நூற்றந்தாதி ரஸிக்கத்தக்கது. இதுவே மயர்வற மதிநல மருளும். இதுவே பேரின்பமாக இங்கேயே முக்தி துல்யாநுபவத்தைத் தரும்.

'பத்தும்' என்பதால் இதிலேயே திருவஷ்டாக்ஷரம், த்வயம் இவற்றின் பொருள்கள் முழுவதும் அடங்கியுள்ளது என்றும் கருத்து. இதுவே பகவான் விஷயத்தில் அத்யந்த ஸ்நேகப் பற்றாகும். வரப்போகிற உத்தர த்விகஸங்க்ரஹமான அடுத்த திருவாய்மொழிக்கு 'வீடே' எனும் கடைப்பதம் ஸாதநம் ஸாத்யம் இரண்டையும் காட்டிக்கொண்டு அவதாரிகையாகும். இங்கே முன்பாதியில் மஹாபூதங்களையும் அவற்றுக்குள்ள சக்தி குணாதிகளின் ஆவிஷ்காரத்தையும் குறிப்பதால் வ்யஷ்டி ஸ்ருஷ்டியும் பகவத் கர்த்ருகமே; ஹிரண்யகர்ப்பகர்த்ருகமல்ல வென்று தீர்மானிக்கும் இரண்டாம் அத்யாயத்தின் கடைசி அதிகரணத்தை விளக்குகிறார். அங்கே 'ஸம்ஜ்ஞாமூர்த்தி க்லுப்திஸ்து த்ரிவ்ருத் குர்வத உபதேசாத்' என்று ஸூத்ரத்தில் கூறிய ப்ரஹ்மாநுப்ரவேச பூர்வக நாமரூப வ்யாகரணத்தையே முன் பாதியில் 'எல்லாமாய் நின்ற' என்று பாடுகிறார். உலகத்தில் குடம் முதலியதைச் செய்பவர் அதற்குள் வாஸனையையும் சேர்த்துச் செய்பவரல்ல. அதன் வாஸனையெல்லாம் அகில புவந ஸ்ரஷ்டாவான ஈச்வரனாலேயே அமைக்கப்படுகிறதென்கிற வைசித்ரியத்தை ஏழாம் அத்யாய விபூதி ச்லோகங்களின் உரையில் 'ரஸாதிஸ்வபாவா நாம் ஸாராணாம் ஸ்வபாவகேவ ஸாரகேவ ச விசேஷதாவிநியாமக:' என்று ஸ்ரீமத்வபாஷ்யம் காட்டிய ரஸமே இங்கே முன் பாதியில் இரண்டாம் அடியில் அந்தந்த பூதகுணங்களுக்குப் பகவானை மூலமாகக் காட்டுவதால் விளக்கப்படுகிறது.

முதல் திருவாய்மொழி முற்றிற்று

இரண்டாம் திருவாய்மொழி
முதற்பாட்டு

வீடுமின் முற்றவும் வீடுசெய் தும்முயிர்
வீடுடை யானிடை வீடுசெய்ம் மின்னே.
(திருவாய்மொழி 1-2-1)

இத்திருவாய்மொழியில் 3, 4-வது அத்யாயங்களின் விஷயங்களை ஸூசிப்பது ஸ்பஷ்டம். ஸம்ப்ரதாயமும் அப்படியே. ‘உபாஸநபரமாகச் சொல்லவேண்டு மவற்றுக்கெல்லாம் ஸங்க்ரஹமாய் இருக்கிறது இத்திருவாய்மொழி’ என்று ஈட்டில். உபாஸந மென்பது ஸாத்யத்திற்கும் உபலக்ஷணம். உபாஸநமும் ஸாத்யமான பலம்போல் இன்பம் பயப்பதென்று விளக்குவதில் நோக்கு. 3, 4-அத்யாயங்களில் ஸாத்யத்தையும் ஸாதநத்தையும் அநேக இடங்களில் கலந்தே பேசியுள்ளது. பலாதிகரணம் ஸாத்யத்தை நிரூபிப்பது. அது மூன்றும் அத்யாயத்தில் உள்ளது. பலத்தை உடனே அடைவிப்பதும் பல பர்வத்தில் சேர்ந்ததுமான அர்ச்சிராதி கதி மூன்றும் அத்யாயத்திலும் விசாரிக்கப்பட்டுள்ளது. புண்ய பாபங்கள் விட்டுப்போவதுமான மோக்ஷ பலமும் அங்கு ஸாம்பராயாத்யதிகரணங்களில் விசாரிக்கப்படுகிறது. உபாஸந மென்னும் ஸாதநத்தின் ஸ்வரூபமும் 4-ம் அத்யாயத்தின் முதல் பாதத்தில் விஸ்தாரமாய் விளக்கப்படுகிறது. ஒரே திருவாய்மொழியில் ஸாதநத்தையும் ஸாத்யத்தையும் ஆழ்வார் விளக்குவது ஸாதநமும் ஸாத்யம்போல் இன்பமய மென்கிற கருத்தினால்தான். ‘பகவதேகபோகத்வோபாயமான பக்தியோகத்தைப் பகவத் வ்யதிரிக்த விஷய வைராக்ய பூர்வகமாக உபதேசிக்கிறார்’ என்று இங்கே ஆறாயிரப்படி ப்ரவேசம். உலகத்தையே கூப்பிட்டுக் கருணையால் எல்லோரும் உஜ்ஜீவித்து வீடு பெறவேணு மென்று உபதேசிக்கிறார். வீடு பெறுவதற்கு வீடு என்னும் விடுகையான த்யாகமே உபாயம். வீட்டிற்கு வீடே உபாய மென்று சப்தத்தாலும் ஸாதந ஸாத்யங்கள் ஒன்றே என்று ரஸமாய்ப் பாடுகிறார். ‘த்யாகேநைகே அம்ருதத்வமாநசு:’ முதலிய ச்ருதிகளிலும் த்யாகம் என்னும் பதம் விடுகையையும், ஸமர்ப்பணத்தையும் சொல்லுவதுபோல ந்யாஸ ஸந்ந்யாஸ பதங்களும் அப்படியே. தமிழில் வீடும் அப்படியே என்பதை ஆழ்வார் விளக்கும் ரஸம் ரஸிக்கத்தக்கது. விடுகை என்கிற த்யாகம் ஸவாஸநமாக சாச்வதமாகவும் அநாவ்ருத்தமாகவும் தீர்க்க தீர்க்கமாயும் இருக்கவேண்டு மென்பதை ‘விடு’ என்னும் பதத்தை ‘வீடு’ என்று நீட்டிப்பாடுவதால் ஸூசிக்கும் ரஸம் ரஸிக்கத்தக்கது. இங்கேசொல்லுகிற த்யாகம் ‘ஸர்வதர்மாந் பரித்யஜ்ய’ ‘பரித்யக்தா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச’ என்ற விடங்களில் போல அடியோடு ஒழிக்கும் பரித்யாக மென்பதை ‘வீடு’ என்று நீட்டுவதால் விளக்குகிறார்.

இப்பாசுரத்தில் வீடு என்னும் பதம் நான்கு அடிகளிலும் பொருள் வேறாக இருந்து முதல்பதமாக ப்ரயோகிப்பது ரஸிக்கத்தக்கது. முதல் ‘வீடு’ என்பதற்குச் சிற்றின்ப விஷயங்களையும், சரண்யாந்தரங்களையும், காம ஸாதநமான தர்மாதிகளையும், ஸகலோபாயங்களையும் ‘ஸ்வர்க்கம் ஜஹேதி புண்யாய:’, ‘ஸுக்ருதம் துஷ்க்ருதம் புண்யாய:’ ‘ஜநாதந்யாதஸ்வபாவ ஸித்யா ஸ்வேஷ ஸ்வீதி யாஜதி:’ ‘ஸம்ஸாரதரு ஸம்ஹர்த்ரீம் பீஜஜாதியா ஸ்வீதா’ என்றபடி ஸம்ஸாரத்திற்கு மூலமாய் உள்ள ‘நீர்நுமது’ என்பதை அடியோடு விட்டு வேர்முதல் மாய்ப்பதை உபதேசிக்கிறார். இதனிலும் மிக்க பயமில்லை என்று எச்சரிக்கிறார்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸதுபதேசம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ. உப. முக்கூர் ராஜகோபாலாசார்ய ஸ்வாமி, திருவள்ளூர்.]

சிஷ்யன்—ஸ்வாமிந்! ஸ்ரீ வைகுண்ட மஹிமையை அடியேனுக்குப்புரியும்படி நடைமுறையில் உள்ள எளியதான தமிழ் பாஷையில் விஸ்தாரமாகச்சொல்லவேண்டும்; புரியாத பதங்களைச் சேர்த்துச்சொன்னால் அடியேன் தேவரீரை நேரில் கேட்டுத் தெரிந்துகொண்டு விடுகிறேன். ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவை வாசிக்கும் எல்லோருக்கும் புரிந்துவிடுமா? ஆகையால் நடைமுறையில் உள்ள பாஷையாலேயே சொல்லவேண்டும்.

ஆசார்யன்—ஸ்ரீவைகுண்டத்தில் திவ்ய திருமேனியோடு ஸேவைதந்தருளுகிற பகவானையும் அத் திருமேனிக்குத் தகுந்த திவ்ய திருமேனியோடு ஸேவை தந்தருளுகிற மஹாலக்ஷ்மியையும் வணங்கிவிட்டு உனக்கு ஸ்ரீவைகுண்ட மாஹாத்ம்யத்தைச் சொல்லுகிறேன்.

சிஷ்—ஸ்வாமிந்! மஹாலக்ஷ்மியின் திருமேனி மாத்திரம்தானா பகவானுடைய திருமேனிக்குத் தகுந்தது? அந்த மஹாலக்ஷ்மியின் ஸ்வரூபம் எப்படி? கல்யாணகுணங்கள் எப்படி என்பதையும் ஸாதிக்கவேண்டும்.

ஆசா—முன்பே சுருக்கமாகச்சொல்லியிருக்கிறேன். விஸ்தாரமாகவும் சொல்லுகிறேன் கேள். மஹாலக்ஷ்மியின் ஸ்வரூபம் அணுவல்ல; அதாவது ஜீவாத்மாக்களைப்போல் சிறியதுஅல்ல; மஹாலக்ஷ்மியின் ஸ்வரூபம் விபு. அதாவது, பகவானுடைய விபுவான ஸ்வரூபமானது எப்படி எங்கும் நிறைந்ததோ அதைப்போல் எங்கும் நிறைந்தது. ஈச்வரஸ்வரூபம் எப்படி ஜ்ஞாநாநந்தமயமானதோ அப்படியே ஈச்வரியான லக்ஷ்மியின் ஸ்வரூபமும் ஜ்ஞாநாநந்தமயமானது. அந்த பகவான் எப்படி ஸகல கல்யாணகுணங்களோடு கூடியவரோ அப்படியே மஹாலக்ஷ்மியும் ஸகல கல்யாண குணங்களோடும் கூடியவள். 'அம்ருதஸ்யைஷஸேது:' என்று பகவான் எப்படி முக்திக்குஸித்தோபாயனோ அதைப்போல் மஹாலக்ஷ்மியும் முக்திக்கு ஸித்தோபாயமானவள். பகவான் எப்படி ஸாத்யோபாயமான பக்தியோகம் என்கிற உபாஸநத்தில் ஸகல கல்யாண குணங்களும் நிறைந்து இருந்தபோதிலும் அந்தந்த வித்யைகளில் சொல்லியிருக்கிறபடி உபாஸிக்கப்படுகிறானோ அப்படியே அந்த மஹாலக்ஷ்மியும் சேர்த்து உபாஸிக்கப்படுகிறாள். பக்தியைக்காட்டிலும் கௌணமானஸாத்யோபாயமான ஆத்மநிக்ஷேபம் என்றும் பெயர் உள்ள சரணாகதியில் பகவான் எப்படி 'உபாயாந்தரமான பக்தியோகஸ்தானத்தில் நீயே இருந்து ரக்ஷிக்கவேண்டும்' என்று ப்ரார்த்திக்கப்படுகிறானோ அப்படியேதான் மஹாலக்ஷ்மியும் ப்ரார்த்திக்கப்படுகிறாள். அதாவது 'திவ்ய தம்பதிகளான நீங்கள் இருவரும் உபாயாந்தரஸ்தானத்திலிருந்து ரக்ஷிக்கவேண்டும்' என்று ஒரே ஸமயத்தில் ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். இருவரும் சேர்ந்து முக்தியைக்கொடுக்கிறார்கள். இவ்விருவரையும் சேர்த்து நித்யர்கள் முக்தர்கள் எல்லோரும் அநுபவித்து ஆநந்திக்கிறார்கள். இப்படியிருக்க மஹாலக்ஷ்மிக்கு ஒரு ஏற்றமுண்டு. குற்றங்களுக்குத் தகுந்தபடி தண்டிக்கிற பகவான் தன்னைச் சரணமடைய வந்தவர்களுக்கு முகம்கொடாதிருக்கும் ஸமயத்தில் அந்த பகவானிடம், மேல் அவர்கள் செய்யப்போகிற அம்சங்களைத் திருவுள்ளம் பற்றும்படி சிபார்சு செய்கிறதான புருஷகாரத்வம். இதை அநுஸரித்துத்தான் ஸ்ரீ ஆளவந்தார் 'ஆகாரத்ரயஸம்பந்நாம்' என்று அருளிச்செய்தது. புருஷகாரத்வம், உபாயத்வம், உபேயத்வம் என்று ஆகாரங்கள் லக்ஷ்மிக்கு. பகவானுக்கு ஒன்று இல்லை. அதாவது. புருஷகாரத்வம். உபாயத்வம் உபேயத்வம் என்கிற இரண்டு அம்சங்கள்தான் உண்டு. ஆனால் அந்த பகவானிடத்தில் போல் எல்லா குணங்

களும் மஹாலக்ஷ்மியிடத்தில் இருந்தபோதிலும் சில குணங்களை மஹாலக்ஷ்மி உபயோகப்படுத்துகிறதில்லை. அதாவது: தண்டதரத்வம் முதலியவைகளை. இது பல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் காட்டப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் திருவுள்ளம்பற்றித்தான் 'யுவத்வாதௌ துல்யே' என்றும் 'அஸ்யா மமச சேஷம் ஹி விபூதிருபயாத்மிகா' என்றும் 'யதா ஸர்வகதோ விஷ்ணு:' என்றும் 'ததந்தர்பாவாத் த்வாம்' என்றும் 'தம்பதீ ஜகதாம் பதீ' என்றும் 'ஸ்வரூபரூபகுணவிபவைச்வர்யசீலாதி' என்றும் 'ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே' என்றும் 'காடோபகூடாநிதே' என்றும் 'த்வயைதத்விஷ்ணுநாசாம்ப' என்றும் 'ஹ்ரீச்சதே லக்ஷ்மீச்ச பத்ந்யௌ' என்றும் 'உத்தேச்யத்வம்......ஹவிஷி யுவயோ:' என்றும் 'ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே நிலா நிற்ப' என்றும் 'திருமாலே' என்றும் 'ஸ்ரீமந்நாராயணசரணௌ' என்றும் 'ஸ்ரீமதே நாராயணாய' என்றும் 'கோலத்திருமாமகளோடுன்னை' என்றும். இப்படியெல்லாம் பகவானும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் வேதபுருஷனும் ஈட்டுக்காரரும் பலவிடங்களில் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே ஸகலவிதத்திலும் பகவானைப்போன்றவள் மஹாலக்ஷ்மீ. புருஷகாரத்வம் தவிர ஸகலவிதத்திலும் மஹாலக்ஷ்மியைப் போன்றவன் பகவான். அவனுடைய திருமேனி புருஷஸ்வரூபம்; அவளுடைய திருமேனி ஸ்த்ரீஸ்வரூபம். அவன் பர்த்தா; அவள் பத்நீ. அதற்குள்ளதுபோல் குணங்களை ப்ரகாசப்படுத்துகிறான் அவன். பத்நிக்குத்தகுந்ததுபோல் உள்ள குணங்களை ப்ரகாசப்படுத்துகிறாள் அவள். இருவரும் கலந்து ரக்ஷணாதிவ்யாபாரங்களைச் செய்கிறார்கள். அந்த விபுஸ்வரூபிணியான மஹாலக்ஷ்மியின் 'காடோபகூடாநிதே' என்கிறபடி உள்ள ஸம்பந்தத்தால்தான் அந்த பகவானை தேவதாந்தரசங்கைகளிருந்து மீட்டுப் பெரியோர்கள் ஆச்ரயித்து உஜ்ஜீவித்தது நம்மையும் ஆச்ரயிக்கும்படி செய்வித்து உஜ்ஜீவிக்கச் செய்கிறார்கள். இப்படிப்பட்ட திவ்யதம்பதிகளுடையதான அந்த ஸ்ரீவைகுண்டத்தை எப்படி என்னுடைய பூர்வாசார்யர்கள் நன்குணர்ந்து எனக்கு உபதேசித்திருக்கிறார்களோ அப்படி உனக்கும் நம் ஸம்ப்ரதாயஸ்தர்களுக்கும் நான் சொல்லுகிறேன். எப்பொழுதாவது நீ ஸ்ரீ அஹோபிலமடத்திற்குப் போகும்பொழுது ஜ்ஞாபகத்துடன் ஸ்ரீ அழகியசிங்கர்களிடத்தில் கேட்டு நான் சொன்னது ஸரிதானா என்று தெளிந்துகொள்.

சிஷ்—தேவரீர் ஸாதித்ததிலேயே பூர்ணநம்பிக்கைதான். ஸந்தோஷம். வைகுண்டமாஹாத்ம்யத்தைச் சொல்ல நான் கேட்ட கேள்வி தடையாகிவிட்டது. க்ஷமிக்கவேண்டும். வைகுண்டம் எப்படிப்பட்டது?

ஆசா— பதினான்கு லோகங்களையுடையது இந்த ப்ரஹ்மாண்டம். ஏழுவிதங்களான ஆவரணங்களாலே மறைக்கப்பட்டிருக்கிறது. இப்படி கார்யகளாகவும் காரணங்களாகவும் உள்ள ஸமஸ்தவஸ்துக்களையும் தாண்டி வைகுண்டம் என்கிற லோகம் இருக்கிறது. இதற்கு 'பரமவ்யோம' என்றும் பெயர். ப்ரஹ்மா முதலான எந்த தேவதைகளாலும் மனத்தினால் அளவிடமுடியாததும் வாயினால் சொல்லமுடியாததுமான மாஹாத்ம்யத்தை உடையது. ஸகலஸம்பத்தும் நிறைந்தது. கர்மஸம்பந்தமற்ற முக்தர்கள் நித்யர்கள் இவர்களுக்கே அர்ஹமானது. ஸநகஸநந்தந ருத்ராதிகளாலேயும் அளவிடமுடியாத மாஹாத்ம்யமுள்ளவர்களாயும், எப்பொழுதும் பரிபூர்ணஜ்ஞாநவிகாஸமுள்ளவர்களாயும், கணக்கிடமுடியாதவர்களாயும், பகவானுக்கு அநுகூலமான கைங்கர்யங்களைப் பரமாஸ்தையோடு செய்து ஆநந்திக்கிறவர்களாயும் இருக்கிற நித்யஸூரிகளாலேயும்; ஆசார்யகடாக்ஷம் பெற்று பக்தி ப்ரபத்திகளில் ஏதேனும் ஒன்றை அநுஷ்டித்து முக்தி அடைந்து பரிபூர்ணவிகஸித ஜ்ஞாநமுடையவர்களாகவும், பரமபுருஷனுடைய திருவுள்ளத்தை ஸாக்ஷாத்கரித்து அபிமதமான கைங்கர்யங்களைப் பண்ணி ஆநந்திக்கிறவர்களாயும் உள்ள முக்தர்களாலேயும் நிறைந்ததாகவும் இருக்கிறது வைகுண்டம். அப்படிப்பட்ட நித்யமுக்தர்களுக்கும் எவ்வளவு பெரியது? எவ்வளவு ஸம்பத்துகள் நிறைந்தது? எந்தமாதிரியான மாஹாத்ம்யமுள்ளது? என்று அளவிடமுடியாததாகவும் உள்ளது.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரமஹோத்ஸவம்

இந்த மஹோத்ஸவம் திருஎவ்வுள்ளூரில் ஸ்ரீ பெரியஅழகிய சிங்கர் நியமனப்படி கர ஹூ கார்த்திகைமீ 15உ (1–11–51) யன்று வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. இம் மஹோத்ஸவத்திற்கு வெளியிடங்களிலிருந்தும் அநேக சிஷ்யர்கள் வந்திருந்தனர். அன்று பெரிய திருமஞ்ஜனமும் விசேஷததீயாராதனமும் டோலோத்ஸவமும் ஸ்ரீ. உப. மங்கலம் ராமாநுஜ ஐயங்கார் ஸ்வாமியால் பக்திச்ரத்தைகளுடன் பண்ணிவைக்கப்பட்டது.

வழக்கம்போல்ஸ்ரீசின்னஅழகியசிங்கரால் ஸ்ரீ பாததீர்த்தம் ஸாதிக்கப்பட்டது. ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடையவும் ஸ்ரீஅஹோபிலம் முதலான திவ்யதேசத்தெம்பெருமான்களுடைய மரியாதைகளும் ஸ்ரீ பெரிய அழகியசிங்கருக்கு ஆனதும் ஸ்ரீ சின்ன அழகியசிங்கருக்கு அருளப்பாடிட்டு ஆயிற்று. வந்திருந்த சிஷ்யகோடிகளால் ஸ்ரீ அழகியசிங்கர்களுக்கு ஸம்பாவனை பண்ணப்பட்டது. பிறகு திருமஞ்ஜனம் இஜ்யாராதன மங்களஹாரத்திகள் ஸ்ரீ சின்ன அழகியசிங்கரால் பண்ணப்பட்டது. பிறகு

‘ந தேஷ்வஹஸ்ஸு ப்ராணோ வா க்ஷீயதே தாவாத்வித்ருஷ்யதே’ என்று ஆரம்பித்து ‘நாநாதேசாந்தவாஸ்தவ்யா: வாஸ்தாஷா: ஸ்ரீமதாஷயா | ஸுஹவாநைவஸ்விஹிதாஷஸ்யஜேஜு மஹாத்மந: | ஸுஹம் ஹி வியிவஸ்தாஷஸ்வஸ்ஸம்வஸதி விஜக்ஷணா:’ என்றபடி ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி பாகவதாராதனம் நடந்தேறியது. ராத்ரிஸ்ரீகண்ணனுக்கு டோலோத்ஸவம் அத்யாச்சர்யமாக நடந்தது. இரண்டு ஸ்ரீஅழகியசிங்கர்களும் எழுந்தருளி மங்களாசாஸம் செய்தபோது பக்தகோடிகள் இப்படியே ஸ்ரீஅழகியசிங்கர்கள் பல்லாண்டு எழுந்தருளியிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். அப்போது ஸ்ரீ பெரிய அழகியசிங்கர்ஸாதித்தருளிய உபந்யாஸம்;-

யத்கடாக்ஷேண ஸர்வேऽபி யதா நாமத பொமிந: | ஸ்ரீந்ருஸிம்ஹதயாபாத்ரீணோ:”

என்றாரம்பித்து ஸ்ரீ சின்ன அழகியசிங்கருடைய ஜ்ஞாநாநுஷ்டாநங்களைப் பற்றியும், பூர்வாச்ரம திருத்தகப்பனருடைய குணங்களைப்பற்றியும்

‘டஸ்ய ஸ்யாக ஜ்ஞாத்ருப: விதா’

என்கிறபடி ஸாதித்து, ‘ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனே இந்த ஸ்தாநத்திற்கு இப்படி தனக்குத் தகுந்த அழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணிக் கொண்டானே தவிர நாம்செய்யும் காரியமன்று. இதை நன்றாகப் பராமர்சித்துப்பார்த்தால் நம் ஸம்ப்ரதாயம் மேன்மேலும் அபிவ்ருத்தமாகவேணுமென்கிற திருவுள்ளம் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்கு இருப்பது தெரிய வருகிறது. இரண்டு அழகியசிங்கர்களாக எழுந்தருளியிருந்து தன்னுடைய திருவாராதனங்களைப் பண்ணவேணும் என்று அவன் ஸங்கல்பித்துக்கொண்டு நமக்கு சரீரத்தில் அஸ்வாஸ்த்யவ்யாஜேந ஸ்ரீ அழகியசிங்கரையும் நம் மூலமாக ஆஸ்தானத்திற்கு எழுந்தருளப்பண்ணிக்கொண்டான். பால்யாதாரம்பித்து அழகியசிங்கர் ஸ்தாநார்ஹராக எழுந்தருளியிருந்தது நமக்குத்தெரிந்தாலும், உலகத்தார்க்குத்தெரியும்படி நம்மால் ஸ்ரீ மதுராந்தகத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஸம்ஸ்க்ருத கலாசாலைக்கு அத்யக்ஷராக எழுந்தருளப்பண்ணிவைத்தும், அங்குள்ள ப்ரவசநகர்த்தாக்களுக்கு ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களை சிந்தனரூப காலக்ஷேபம் ஸாதிக்கும்படியும்நியமித்து, அதன்மூலமாகஸ்ரீ அழகியசிங்கரின் ஜ்ஞாநவைராக்யாதிகுணங்களை ப்ரகாசப்படுத்தியுமிருக்கிறோம். அழகியசிங்கர் எங்கும் ப்ரதிக்ரஹம் பண்ணியதே கிடையாது. நம் மாலோல வித்வத்ஸதஸில் கூட ஸம்பாவனையை வாங்குவதுகிடையாது. இதனால்ஸ்ரீ அழகியசிங்கருடைய வைராக்யமானது நன்கு விளங்குகிறது. இப்போது நம்மோடு கூடவிருந்து காலக்ஷேபம் ஸாதித்துவருவதிலிருந்துஜ்ஞாநாதிகளும்ஆத்மகுணங்களும் அநுஷ்டாநங்களும் நன்கு அறிந்ததே. நம்மால் ஏற்படுத்தப்பட்ட ஸம்ஸ்க்ருதகலாசாலை ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாபத்ரிகை, ஸ்ரீமாலோலவித்வத் ஸதஸ் முதலான நம் ஸம்ப்ரதாயாபிவ்ருத்திகரமான கார்யங்களைச் செவ்வனே நடத்திக்கொண்டு அழகியசிங்கர் பல்லாண்டு பல்லாண்டுகளாக எழுந்தருளியிருந்து நம் ஸம்ப்ரதாயத்தை ஸ்தாபித்தருள ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அநுக்ரஹிக்கவேண்டும்.’ என்று.

ஸ்ரீ. உப. வித்வான் ஜோ. ரங்காசார்யர்,
ஸ்ரீகார்யம், ஸ்ரீஅஹோபிலமடம்.

ஸ்ரீ:

ஸ்ரீ𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

கோதாஸ்துதி

[ஸ்ரீ. உப. வித்வான், மேல்பாக்கம், நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, வ்யாகரணத்யாபகர், ஸம்ஸ்க்ருத கலாசாலை, மதுராந்தகம்.]

ஸ்ரீ𑌮𑌾𑌨𑍍 𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌕𑍇𑌸𑌰𑍀 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌰𑍍𑌯𑍋 𑌮𑍇 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌿 ॥

[ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிக கேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥]

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் எம்பெருமான் ஆங்காங்கு கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும், திவ்யம், அபிவ்யக்தம் என்று ப்ரஸித்தபெற்ற க்ஷேத்ரங்களை மங்களாசாஸநம் செய்துகொண்டு தென்திசையில் அப்படிப்பட்ட க்ஷேத்ரங்களுள் முக்யமான 'ஸ்ரீவில்லிபுத்தூர்' என்கிற திவ்யக்ஷேத்ரத்தை அடைந்து அங்கு எழுந்தருளியிருக்கும் ஆண்டாளென்றும், சூடிக்கொடுத்தநாச்சியார் என்றும், உலகம்கொண்டாடும் கோதாதேவியை மங்களாசாஸநம் பண்ணும்போது 'என்னுடைய திருப்பாவை முதலிய திவ்யப்ரபந்தங்களின் தத்வார்த்தங்களை அநேகம் க்ரந்தங்களின் மூலமாய் இவர் உலகத்திற்கு வெளியிட்டிருக்கிறார்' என்று தம்விஷயத்தில் ப்ரஸந்நையாகி, திருமாலை, திருப்பரியட்டம் முதலியவைகளை ஸாதித்தருளிய கோதையை பக்த்யதிசயத்தினால் ஸ்தோத்ரம் செய்யத் திருவுள்ளம்பற்றி, முதலில் அவள்விஷயமாகவே மங்களத்தை அருளிச்செய்கிறார் 'ஸ்ரீவிஷ்ணுசித்த' இத்யாதியால்—

ஸ்ரீ𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌕𑍁𑌲𑌨𑌨𑍍𑌦𑌨𑌕𑌲𑍍𑌪𑌵𑌲𑍍𑌲𑍀𑌂
ஸ்ரீ𑌰𑌙𑍍𑌗𑌰𑌾𑌜𑌹𑌰𑌿𑌚𑌨𑍍𑌦𑌨𑌯𑍋𑌗𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌮𑍍 ।
𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑍍𑌷𑌮𑌾𑌂 𑌕𑌰𑍁𑌣𑌯𑌾 𑌕𑌮𑌲𑌾𑌮𑌿𑌵𑌾𑌨𑍍𑌯𑌾𑌂
𑌗𑍋𑌦𑌾𑌮𑌨𑌨𑍍𑌯𑌶𑌰𑌣𑌃 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥ (1)

[ஸ்ரீவிஷ்ணுசித்தகுலநந்தனகல்பவல்லீம்
ஸ்ரீரங்கராஜஹ்ரிசந்தனயோகத்ருச்யாம் ।
ஸாக்ஷாத்க்ஷமாம் கருணயா கமலாமிவாந்யாம்
கோதாமநந்யஶரண: ஶரணம் ப்ரபத்யே ॥]

(அர்த்தம்) ஸ்ரீவிஷ்ணுசித்த— ஸ்ரீவிஷ்ணுசித்தரென்று ப்ரஸித்திபெற்ற பெரியாழ்வாருடைய, குல— குலமாகிற, நந்தந— நந்தனவனத்திற்கு, கல்பவல்லீம்— கற்பகக் கொடியாயும், ஸ்ரீரங்கராஜ- ஸ்ரீரங்கநாதனாகிற, ஹரிசந்தந— ஹரிசந்தனமென்கிற தேவலோகவிருக்ஷத்தின், யோக—ஸம்பந்தத்தினால், த்ருச்யாம்—பார்க்கத்தகுந்தவளும், ஸாக்ஷாத்க்ஷமாம்— (உருவமெடுத்த பொறுமை போன்றவளும்) பூமிதேவியின் அவதாரபூதையாயும், கருணயா- தயையினால், அந்யாம் கமலாமிவ- வேறுலக்ஷ்மீபோலவுமிருக்கிற, கோதாம்— கோதாதேவியை, (ஆண்டாளை) அநந்யசரண:- வேறு புகலற்றவனாய்க்கொண்டு, சரணம்- சரணமாக, ப்ரபத்யே—

அடைகிறேன்.

(கருத்து) பகவத்பக்தி, வைராக்யம் முதலிய அநேக கல்யாணகுணங்கள் நிறைந்து ஸ்ரீவிஷ்ணுசித்தரென்று ப்ரஸித்திபெற்ற பெரியாழ்வாரின் குலமாகிய நந்தனவனத்திற்கு கற்பகக்கொடிபோன்றவளும், ஸ்ரீரங்கநாதனுகிற ஹரிசந்தனவிருக்ஷத்தின் சேர்க்கையால் பார்க்கத்தகுந்த அழகுள்ளவளும், (உருவெடுத்த பொறுமைபோன்றவளும்) பூமிப்பிராட்டியினவதாரமாயும், காருண்யத்தினுல் ‘இவள் ஒரு மஹாலக்ஷ்மியோ!’ என்று சொல்லத்தகுந்தவளுமான ஆண்டாளைப்புகலொன்றில்லாவடியேன் சரணமடைகிறேன். (ஒரு கொடி விருக்ஷத்தை பற்றினுல் அதன் சோபை அதிகரிக்கும். கல்பலதைபோன்ற இவள் ஹரியாகிய ஹரிசந்தநமரத்தை அவலம்பித்து (பர்த்தாவாக அடைந்து) சோபாவிசேஷத்தை அடைந்திருக்கிருள் என்று ஸூசிதம்.)

𑌵𑍈𑌦𑍇𑌶𑌿𑌕𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌗𑌿𑌰𑌾𑌮𑌪𑌿 𑌭𑍂𑌯𑌸𑍀𑌨𑌾𑌂
𑌵𑌰𑍍𑌣𑍇𑌷𑍁 𑌮𑌾𑌤𑌿 𑌮𑌹𑌿𑌮𑌾 𑌨 𑌹𑌿 𑌮𑌾𑌦𑍃𑌶𑌾𑌂 𑌤𑍇 ।
𑌇𑌤𑍍𑌥𑌂 𑌵𑌿𑌦𑌨𑍍𑌤𑌮𑌪𑌿 𑌮𑌾𑌂 𑌸𑌹𑌸𑍈𑌵 𑌗𑍋𑌦𑍇
𑌮𑍌𑌨𑌦𑍍𑌰𑍁𑌹𑍋 𑌮𑍁𑌖𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌗𑍁𑌣𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌾𑌃 ॥ (2)

[வைதேசிகஃ ச்ருதிகிராமபி பூயஸீநாம்
வர்ணேஷு புாதி மஹிமா ந ஹி மாத்ருசாம் தே ॥
இத்தம் விதந்தமபி மாம் ஸஹஸைவ கோதே
மௌநத்ருஹோ முகரயந்தி குணாஸ்த்வதீயாஃ ॥]

(அ—ம்) ஹே கோதே— கோதையே! பூயஸீநாம்— மிகவும் அதிகமான, ச்ருதிகிராம் அபி— வேதவாக்குகளுக்கும், வைதேசிக:— தூரதேசத்திலிருக்கிற (எட்டாத) தே— உன்னுடைய, மஹிமா— பெருமையானது, மாத்ருசாம்— என்னைப்போன்றவர்களுடைய, வர்ணேஷு—ஸ்தோத்ரங்களில், நமாதிஹி—அடங்காதல்லவா! இத்தம்—இந்த ப்ரகாரம், விதந்தமபி— அறிகின்றவனுயிருந்தபோதிலும், மாம்—என்னை, மௌநத்ருஹ:— மௌநத்தை த்வேஷிக்கிற, த்வதீயா:—உன்னுடையதான, குணா:—கல்யாணகுணங்கள், ஸஹஸைவ- பலாத்கரித்து, முகரயந்தி-ஸ்தோத்ரசப்தமுள்ளவனுகச்செய்கின்றன. (ஸ்தோத்ரம் பண்ணச்செய்கின்ற என்றபடி)

(கரு) ஹே கோதே! உன்னுடைய பெருமையோ அநந்தமான ச்ருதிகளுக்கும் எட்டாதது. இப்படிப்பட்ட உன் பெருமையை, அல்பசக்திகளான என்போன்றவர்கள் ஸ்தோத்திரம் செய்வது உசிதமல்ல. பேசாமலிருப்பதே உசிதமென்று என் ஸ்வபாவாநுகுணமாக ஒதுங்கியிருந்தபோதிலும், வாத்ஸல்யம் முதலான உனது கல்யாணகுணங்கள் என் மௌனத்தை உதறச்செய்து உன் ஸ்தோத்திரத்தில் என்னை ப்ரவர்த்திப்பிக்கின்றன.

𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑍇𑌯𑌸𑌃 𑌶𑍍𑌰𑌵𑌣𑌯𑍋𑌰𑌮𑍃𑌤𑌾𑌯𑌮𑌾𑌨𑌾𑌂
𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌂 𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌮𑌣𑌿𑌨𑍂𑌪𑍁𑌰𑌶𑌿𑌞𑍍𑌜𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 ।
𑌗𑍋𑌦𑍇 𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌜𑌨𑌨𑌿 𑌤𑍍𑌵𑌦𑌭𑌿𑌷𑍍𑌟𑌵𑌾𑌰𑍍𑌹𑌾𑌂
𑌵𑌾𑌚𑌂 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌮𑌧𑍁𑌰𑌾𑌂 𑌮𑌮 𑌸𑌂𑌵𑌿𑌧𑍇𑌹𑌿 ॥ (3)

த்வத்ப்ரேயஸஃ ச்ரவணயோரம்ருதாயமாநாம்

துல்யாம் த்வதீயமணிநூபுரசிஞ்ஜிதாநாம் ।
கோதே த்வமேவ ஜநநி த்வதபிஷ்டவார்ஹாம்
வாசம் ப்ரஸந்நமதுராம் மம ஸம்விதேஹி ॥

ஹே ஜநநி கோதே-தாயான கோதையே! (நல்ல வாக்கைக் கொடுக்கிறவளே) த்வத்ப்ரேயஸ꞉-உன்னுடைய பர்த்தாவின், ச்ரவணயோ꞉-செவிகளுக்கு, அம்ருதாயமாநாம்-அம்ருதம் போன்றதாயும், த்வதீய-உன்னுடைய,மணிநூபுர-ரத்நமயமான தண்டைகளின், சிஞ்ஜிதாநாம்-சப்தங்களுக்கு, துல்யாம்-ஸமானமாயும், த்வதபிஷ்டவார்ஹாம்-உன்னை ஸ்தோத்திரம் செய்யத்தகுந்ததாயும். ப்ரஸந்நமதுராம்— சீக்கிரத்தில் அர்த்தத்தை உணர்த்தக்கூடியதாயும், இனிமையாயுமிருக்கிற, வாசம்-வாக்கை, த்வமேவ-நீயே, மம-எனக்கு, ஸம்விதேஹி-நன்ருகச்செய்துகொடுக்கவேணும்.

(கரு) வாக்கைக் கொடுப்பவளான கோதாதேவியே! உன்னை ஸ்தோத்திரம் செய்யத்தகுந்த வாக்ஸாமர்த்தியம் எனக்கில்லை. ஆகையினுல் அப்படிப்பட்ட வாக்கை நீயே அநுக்ரஹிக்கவேணும். எந்த வாக்கு உன் ப்ரியனுன ஸ்ரீரங்கநாதனுக்கு உன் தண்டைகளின் இன்னெலிபோல் கர்ணாம்ருதமாயிருக்குமோ, மேலும், லளிதபதங்களால் அமைந்து கேட்பவர்களுக்கு இனிமையாயும் சீக்கிரத்தில் அர்த்தத்தை உணர்த்தக்கூடியதாயுமிருக்குமோ அப்படிப்பட்ட வாக்கை நீ அநுக்ரஹிக்கவேணும்.

[இதனுல் இந்த ஸ்தோத்ரம் பகவானுக்கு உகந்ததாயும் கேட்பவர்களுக்கு சீச்கிரம் அர்த்தத்தை போதிக்கக்கூடியலளிதபதங்கள் அமைந்துள்ளது என்றும் சொல்லப்பட்டதாகிறது.]

𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌨𑍍𑌵𑌯𑍇𑌨 𑌦𑌧𑌤𑍀𑌂 𑌯𑌮𑍁𑌨𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌂
𑌤𑍀𑌰𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌥𑌾𑌵𑌦𑌵𑌗𑌾𑌹𑍍𑌯 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌂 𑌤𑍇 ।
𑌗𑍋𑌦𑍇 𑌵𑌿𑌕𑌸𑍍𑌵𑌰𑌧𑌿𑌯𑌾𑌂 𑌭𑌵𑌤𑍀𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍
𑌵𑌾𑌚𑌃 𑌸𑍍𑌫𑍁𑌰𑌨𑍍𑌤𑌿 𑌮𑌕𑌰𑌨𑍍𑌦𑌮𑍁𑌚𑌃 𑌕𑌵𑍀𑌨𑌾𑌂 ॥ (4)

க்ருஷ்ணாந்வயேந தததீம் யமுநாநுபாவம்
தீர்த்தைர் யதாவதவகாஹ்ய ஸரஸ்வதீம் தே ।
கோதே விகஸ்வரதியாம் பவதீகடாக்ஷாத்
வாசஃ ஸ்புரந்தி மகரந்தமுசஃ கவீநாம் ॥

(அ—ம்) ஹே கோதே, க்ருஷ்ணாந்வயேந-பகவானுடைய ஸம்பந்தத்தினுல் அதாவது குணவர்ணநத்தினுல், கண்ணபிரானுடைய க்ரீடை முதலானவையினுல், யமுநாநுபாவம்-யமுனு நதியின் மஹிமையை, தததீம்-தரிக்கிற, தே ஸரஸ்வதீம்-உன்னுடைய வாக்கை, திருப்பாவை முதலான திவ்யப்ரபந்தத்தை என்றபடி, (ஸரஸ்வதீ நதியை) தீர்த்தை꞉-ஆசார்யர்களினுல், (துறைகளினுல்) யதாவத்-சாஸ்த்ரப்படி, அவகாஹ்ய-ஆழ்ந்தறிந்து, ஸ்நாநம் செய்து, பவதீகடாக்ஷாத்-உன்னுடைய கடாக்ஷத்தினுல், விகஸ்வரதியாம்-விகஸித்த புத்தியையுடைய, கவீநாம்-கவிகளுடைய, வாச꞉-வாக்குகள், மகரந்தமுச꞉-தேனைப்பெருக்குகிறவையாக, ஸ்புரந்தி-விளங்குகின்றன.

(கரு) ஹே தேவி! யமுனுநதி ஸ்ரீ க்ருஷ்ணபகவானுடைய திருவிளையாட்டினுல் எப்படி

பரிசுத்தமாய் மேன்மையையடைந்ததோ அப்படியே உன் திருப்பாவை முதலிய திவ்ய ப்ரபந்தங்களும் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருக்கல்யாணகுணங்களை ப்ரதிபாதிப்பதனால் அதிகமான மேன்மையை அடைந்திருக்கின்றன. அப்படிப்பட்ட உன் பாசுரங்களை நன்கு கற்றறிந்து அதினால் உன்னுடைய விசேஷ கடாக்ஷத்திற்குப் பாத்ரர்களான கவிகள் நல்ல புத்தி விகாஸமுள்ளவர்களாயும் தேனினும் இனிய சொற்களையுடையவர்களாயும் விளங்குகின்றனர். [ஆகையினால் நானும் உன்னுடைய கடாக்ஷத்தினால் மதுரகவியாவேன் என்று கருத்து.]

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (5)

[அஸ்மாத்ருசாமபக்ருதௌ சிரதீக்ஷிதாநாம்
அஹ்நாய தேவி தயதே யதஸௌ முகுந்த:।
தந்நிச்சிதம் நியமிதஸ்தவ மௌளிதாம்நா
தந்த்ரீநிநாதமதுரைச்ச கிராம் நிகும்பை:॥]

(அ-ம்) ஹே தேவி! அபக்ருதௌ—லோகாபகாரத்தில், சிரதீக்ஷிதாநாம்—வெகுகாலமாய் ச்ரத்தையுள்ளவர்களான, அஸ்மாத்ருசாம்—என்போன்றவர்களுக்கு, யத்—எந்த காரணத்தால், அஸௌ—இந்த, முகுந்த:—பகவான், அஹ்நாய—சீக்ரம், தயதே—தயவு செய்கிறானே, தத்—ஆகையினால், தவ—உன்னுடைய, மௌளிதாம்நா—சிரஸ்ஸின் மாலையினாலும், தந்த்ரீநிநாத—வீணையின்சப்தம்போல், மதுரை:—இனிமையான, கிராம்—(கல்லஸமாதார)வார்த்தைகளுடைய, நிகும்பை:—வரிசைகளாலும், நியமித: (அஸ்தி)—கட்டுப்பட்டவனாயிருக்கிறான், நிச்சிதம்—இது நிச்சயம்.

(கரு) ஹே தேவி! நாங்கள் வெகுகாலமாய் உலகிற்கு அபகாரம் செய்வதிலேயே நோக்குடையவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட எங்கள் விஷயத்திலும் பகவான் சீக்கிரத்தில் அநுக்ரஹம் செய்கிறார். இதற்கு காரணம் என்னவென்றால், சூடிக்கொடுத்த உன் மாலையாலும், 'கர்மபரவசனான இந்த ஜீவாத்மா, மஹாபராதியாயிருந்தாலும் இவனை சிக்ஷை பண்ணக்கூடாது; யார்தான் அபராதம் செய்யவில்லை? இவன் நம்மைச்சேர்ந்தவனல்லவா! நாம் கைவிட்டால் யார்தான் இவனுக்கு அவலம்பநமாகப்போகிறார்கள்?' என்றவாறு பலவான உன்னுடைய இனியமொழிகளாலும் நீ பகவானைக்கட்டுப்படுத்தியிருப்பதுதான்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] (6)

[சோணாதரேபி குசயோரபி துங்கபத்ரா
வாசாம் ப்ரவாஹவிபவேபி ஸரஸ்வதீ த்வம்।
அப்ராக்ருதைரபி ரஸைர்விரஜா(:)ஸ்வபாவாத்

கோதாபி தேவி கமிதுர் நநு நர்மதா஽ஸி ॥]

(அ-ம்) ஹே தேவி! த்வம்—நீ, ஸ்வபாவாத்—ஸ்வபாவத்தினுல், கோதாபி—கோதாவரியாயிருந்தபோதிலும், சோணாபி—சோணை என்கிற நதியாயும், துங்கபத்ரா— துங்கபத்ரா நதியாயும், ஸாரஸ்வத்யபி— ஸாரஸ்வதீ நதியாயும், விரஜா- விரஜா நதியாயும், நர்மதா- நர்மதா நதியாகவும், அஸி—ஆகிருய். அதாவது— அதரே— உதடுவிஷயத்தில், சோணா— செந்நிறமுடையவளாயும், குசயோ:- ஸ்தநங்கள் விஷயத்தில், துங்கபத்ரா— உயர்வையும் அழகையுமுடையவளாயும், வாசாம்- வாக்குகளுடைய. ப்ரவாஹவிபவே— ப்ரவாஹமாகிற ஐச்வர்ய விஷயத்தில், ஸாரஸ்வதீ—ஸாரஸ்வதீதேவிக்குத் துல்யமாயும், அப்ராக்ருதை:-ப்ராக்ருதிஸம்பந்தமில்லாத ரஸை:- பகவத்பக்திரஸங்களினுல், விரஜா:— ரஜோகுணமில்லாதவளாயும், ஸ்வபாவாத்-ஸ்வபாவத்தினுல், கோதா- கோதையாயும், கமிது:— பர்த்தாவான ஸ்ரீரங்கநாதனுக்கு, நர்மதா ப்யஸி— திருவிளையாட்டைக் கொடுப்பவளாயுமிருக்கிருய்.

(கரு) கோதா என்று கோதாவரிக்குப் பெயரானபடியால், சிலேடையினுல் இன்னும் சோணை, துங்கபத்ரை, ஸாரஸ்வதீ, விரஜை, நர்மதை என்ற நதிகளின் பெயர்களையும் சொல்லித்துதிக்கிருர். ஹே தேவி! செந்நிறமான உதடு உடையவளும், உயர்ந்த அழகான ஸ்தனங்களை உடையவளும், ஸாரஸ்வதிக்கு ஒப்பான வாக்ப்ரவாஹத்தை உடையவளும், ப்ராக்ருதி ஸம்பந்தமற்ற பக்திரஸங்களினுல் ரஜஸ்தமோகுணங்களின் கந்தமில்லாதவளுமான நீ, உன் பர்த்தாவான எம்பெருமானுடைய விளையாட்டுக்குக் காரணமாயிருக்கிருய்.

வல்மீகதஃ ஶ்ரவணதோ வஸுதாத்மநஸ்தே
ஜாதோ ப³பூ⁴வ ஸ முநிஃ கவிஸார்வபௌ⁴மஃ ।
கோ³தே³ கிமத்³பு⁴தமித³ம் யத³மீ ஸ்வத³ந்தே
வக்த்ராரவிந்த³மகரந்த³நிபா⁴ஃ ப்ரப³ந்தா⁴ஃ ॥ (7)

[வல்மீகதஃ ச்ரவணதோ வஸுதாத்மநஸ்தே
ஜாதோ பபூவ ஸ முநிஃ கவிஸார்வபௌமஃ ।
கோதே கிமத்புதமிதம் யதமீ ஸ்வதந்தே
வக்த்ராரவிந்தமகரந்தநிபாஃ ப்ரபந்தாஃ ॥]

(அ-ம்) ஹே கோதே— கோதையே! வஸுதாத்மந:— பூமிப்பிராட்டி ரூபமாயிருக்கிற, தே— உன்டைய, ச்ரவணத:— செவியான, வல்மீகத:- புற்றிலிருந்து, ஜாத:—உண்டான, ஸ: முநி:— அந்த வால்மீகியானவர், கவிஸார்வபௌம:—கவிச்ரேஷ்டராக, பபூவ— ஆனுர். (தே- உன்னுடைய) வக்த்ராரவிந்த— முகமாகிற தாமரை புஷ்பத்தின், மகரந்தநிபா:— தேனுக்கு ஸமமான, அமீ— இந்த, ப்ரபந்தா:— திருப்பாவை முதலிய திவ்யப்ரபந்தங்கள், ஸ்வதந்தே— எல்லாராலும் ஆஸ்வாதனம் செய்யப்படுகின்றன, இதியத்— என்பது யாதொன்றுண்டோ, இதம்— இது, கிம் அத்புதம்- என்ன ஆச்சர்யம்?

(கரு) ஹே கோதாதேவி! பூமியின் ரூபமாகிற உன்னுடைய செவியாகிற புற்றிலிருந்து உண்டான வால்மீகிமஹாமுனிவர் ஸ்ரீராமாயணத்தைச் செய்து கவிகளுள் உயர்ந்தவராய்க் கொண்டாடப்படும்போது ஸாக்ஷாத் உன் திருவாக்கிலிருந்து அவதரித்தவைகளான தேனி

துமினிய ப்ரபந்தங்கள் பகவத்பக்தர்களால் ரஸிக்கப்படுகின்றன என்பதில்என்ன ஆச்சர்யம்?

𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌤𑌵 𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌮𑌂 𑌭𑌵𑌤𑍀𑌵 𑌗𑍋𑌦𑍇
𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 𑌨𑌿𑌜𑌾𑌂 𑌪𑍍𑌰𑌣𑌯𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑌃 ।
𑌉𑌚𑍍𑌚𑌾𑌵𑌚𑍈𑌰𑍍𑌵𑌿𑌰𑌹𑌸𑌙𑍍𑌗𑌮𑌜𑍈𑌰𑍁𑌦𑌨𑍍𑌤𑍈𑌃
𑌶𑍃𑌙𑍍𑌗𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌗𑍁𑌰𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍀𑌯𑌾𑌃 ॥ (8)

[போக்தும் தவ ப்ரியதமம் பவதீவ கோதே
பக்திம் நிஜாம் ப்ரணயபாவநயா க்ருணந்த꞉।
உச்சாவசைர்விரஹஸங்கமஜைருதந்தை꞉
ச்ருங்காரயந்தி ஹ்ருதயம் குரவஸ்த்வதீயா꞉॥]

(அ—ம்) ஹே கோதே–கோதையே! த்வதீயா:–உன்னைச் சேர்ந்தவர்களான, குரவ:– ஆசார்யர்கள், தவ, ப்ரியதமம்– உனக்கு மிகவும் இஷ்டனான எம்பெருமானை, பவதீவ– நீ போல், போக்தும்– அநுபவிப்பதற்கு, நிஜாம், பக்திம்– தங்களுடைய பக்தியை, ப்ரணய பாவநயா– பர்த்தாவினிடத்திலுண்டான அநுராகமாக, க்ருணந்த:– பாவித்துக்கொண்டு, உச்சாவசை:– நாநாவிதமான, விரஹஸங்கமஜை:– பிரிவினுலுண்டானதாயும் சேர்க்கையினு லுண்டானதாயுமிருக்கிற, உதந்தை:–வ்ருத்தாந்தங்களினுல், ஹ்ருதயம்– மனத்தை, ச்ருங் காரயந்தி– ச்ருங்காரரஸமுள்ளதாகச் செய்கிறுர்கள்.

(கரு) கோதையே! உன் திருவருள் பெற்ற ஆசார்யர்கள் உன்னைப்போல் உன் பர்த் தாவான லோகநாதனை அநுபவிப்பதற்காக தங்கள் பக்தியை கணவனிடம் மனைவிக்கிருக்கும் அன்புபோல் பாவித்துக்கொண்டு அநேகவிதமான, பர்த்தாவின் பிரிவு சேர்க்கை இவைக ளின் சரிதங்களைக்கொண்டு மனத்தில் ச்ருங்காரரஸத்தை உண்டுபண்ணுகிறுர்கள்.

𑌮𑌾𑌤𑌸𑍍𑌸𑌮𑍁𑌤𑍍𑌥𑌿𑌤𑌵𑌤𑍀𑌮𑌧𑌿𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌚𑌿𑌤𑍍𑌤𑌂
𑌵𑌿𑌶𑍍𑌵𑍋𑌪𑌜𑍀𑌵𑍍𑌯𑌮𑌮𑍃𑌤𑌂 𑌵𑌚𑌸𑌾 𑌦𑍁𑌹𑌾𑌨𑌾𑌮𑍍 ।
𑌤𑌾𑌪𑌚𑍍𑌛𑌿𑌦𑌂 𑌹𑌿𑌮𑌰𑍁𑌚𑍇𑌰𑌿𑌵 𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌯𑌾𑌂
𑌸𑌨𑍍𑌤𑌃 𑌪𑌯𑍋𑌧𑌿𑌦𑍁𑌹𑌿𑌤𑍁𑌃 𑌸𑌹𑌜𑌾𑌂 𑌵𑌿𑌦𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌮𑍍 । (9)

[மாதஸ்ஸமுத்திதவதீமதிவிஷ்ணுசித்தம்
விச்வோபஜீவ்யமம்ருதம் வசஸா துஹாநாம்।
தாபச்சிதம் ஹிமருசேரிவ மூர்த்திமந்யாம்
ஸந்த꞉ பயோதிதுஹிது ஸஹஜாம் விதுஸ்தவாம்॥]

(அ—ம்) ஹே மாத:– தாயே, அதிவிஷ்ணுசித்தம்– விஷ்ணுசித்தர் என்கிற பெரி யாழ்வாரிடத்தில், (பகவானுடைய மனத்தில்) ஸமுத்திதவதீம்– உண்டாயிருக்கிற, விச்வோ பஜீவ்யம்– எல்லாஜனங்களுக்கும் உஜ்ஜீவிப்பதற்குத் தகுந்ததான, அம்ருதம்– அம்ருதத் திற்கு ஸமானமான ப்ரபந்தத்தை, அம்ருதத்தை, வசஸா– தன் வாக்கினுலே, (தன் கிர ணங்களாலே) துஹாநாம்– பெருக்குகிறவளாயும், தாபச்சிதம்– ஆத்யாத்மிகாதிதாபத்தைப் போக்கடிக்கிறவளாயும், தேஹத்தின் ஸந்தாபத்தைப் போக்கடிக்கக்கூடியதாயும், ஹிமரு சே:– சந்த்ரனுடைய, அந்யாம் மூர்த்திமிவ– வேறுசரீரம் போன்ற, த்வாம்– உன்னை, ஸங்

த:-பெரியோர்கள், பயோதிதுஹிது:- திருப்பாற்கடலின் பெண்ணுகிய மஹாலக்ஷ்மிக்கு, ஸஹஜாம்- உடன் பிறந்தவளாக, (ஸத்ருசமானவளாக) விது:- அறிகிருர்கள்.

(கரு) ஹே கோதாதேவி! உன்னைப் பெரியோர்கள் சந்த்ரனைப்போல் லக்ஷ்மிக்கு ஸஹோதரியாக (ஸத்ருசமானவளாக) சொல்லுகிருர்கள். ஏனென்ருல், சந்த்ரன் விஷ்ணுவின் சித்தத்தில் உண்டானுன். ('சந்த்ரமா மநஸோ ஜாத:' என்னும் ச்ருதி கவனிக்கத்தக்கது) நீயும் விஷ்ணுசித்தரிடம் ஆவிர்பவித்தாய். சந்த்ரன் எல்லாரும் அநுபவிக்கக்கூடிய அமுதத்தை தன் கிரணங்களால் கொடுக்கிருன். நீயும் எல்லாவர்ணத்தாரும் ஓதக்கூடிய திவ்ய ப்ரபந்தமாகிற அமுதத்தை வர்ஷிக்கிருய். சந்தரன் வெய்யிலினுல் உண்டான தாபத்தைப் போக்கடிக்கிருன். நீ ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகமென்கிற தாபத்ரயத்தைப் போக்கடிக்கிருய். சந்த்ரன் (கடலில் பிறந்தபடியால்) எப்படி லக்ஷ்மிக்கு உடன் பிறந்தவனே, அப்படியே நீயும் சந்த்ரனைப்போலிருக்கிறபடியால் லக்ஷ்மிக்கு ஸஹோதரியாகிருய் அதாவது ஸத்ருசியாக ஆகிருய்.

சித்தசப்தம் 'நடுவு' என்று அர்த்தம் உடையதானபடியால் விஷ்ணுசித்தமாகிற (விஷ்ணுவை நடுவில் உடையதான) ஸமுத்ரத்தில் லக்ஷ்மி பிறந்தாள் என்றும் ஒரு அர்த்தம் இப்படி இருவரும் (கோதையும் லக்ஷ்மியும்) விஷ்ணுசித்தத்தில் பிறந்தவர்களாதலால் ஸஹோதரியென்று சொன்னபடி.

𑌤𑌾𑌤𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 𑌮𑌧𑍁𑌭𑌿𑌦𑌃 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌲𑍇𑌶𑌵𑌶𑍍𑌯𑌾𑌤𑍍
𑌕𑌰𑍍𑌣𑌾𑌮𑍃𑌤𑍈𑌃 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌶𑌤𑍈𑌰𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍 ।
𑌤𑍍𑌵𑌨𑍍𑌮𑍌𑌳𑌿𑌗𑌨𑍍𑌧𑌸𑍁𑌭𑌗𑌾𑌮𑍁𑌪𑌹𑍃𑌤𑍍𑌯 𑌮𑌾𑌲𑌾𑌮𑍍
𑌲𑍇𑌭𑍇 𑌮𑌹𑌤𑍍𑌤𑌰𑌪𑌦𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌮𑍍 ॥ (10)

[தாதஸ்து தே மதுபித: ஸ்துதிலேசவச்யாத்
கர்ணாம்ருதை: ஸ்துதிசதைரநவாப்தபூர்வம்।
த்வந்மௌளிகந்தஸுபகாமுபஹ்ருத்ய மாலாம்
லேபே மஹத்தரபதாநுகுணம் ப்ரஸாதம்॥]

(அ—ம்) தே- உன்னுடைய, தாதஸ்து- தகப்பனுரான விஷ்ணுசித்தரோவென்ருல், ஸ்துதிலேசவச்யாத்- ஸ்தோத்ரத்தின் லேசத்தினுலும் வசப்படக்கூடியவனுன, மதுபித:- பகவானிடமிருந்து, கர்ணும்ருதை:- செவிகளுக்கு இனிமையான, ஸ்துதிசதை:- அநேக ஸ்தோத்ரங்களாலும், அநவாப்தபூர்வம்- முன்பு அடையப்படாத, மஹத்தரபதாநுகுணம்- பெரியாழ்வார் என்கிற பிருதுக்கு அநுகுணமான, ப்ரஸாதம்- அநுக்ரஹத்தை, த்வந்மௌளிகந்த- உன்கேசங்களுடைய வாஸனையினுல், ஸுபகாம்- பரிமளமுள்ளதான, மாலாம்- மாலையை, உபஹ்ருத்ய- பகவானுக்கு உபஹாரமாக ஸமர்ப்பித்து, லேபே- அடைந்தார்.

(கரு) உன்னுடைய தகப்பனுராகிய பெரியாழ்வார், அற்பஸ்துதிகளாலும் வசப்படக்கூடிய பகவானிடமிருந்து அம்ருதம்போன்ற அநேக அழகிய ஸ்துதிகளாலும் அடையப்படாத பெரியாழ்வார் என்கிற பிருதை உன் சிரஸில் சூடிக்கொடுத்த மாலையை உபஹாரமாக ஸமர்ப்பித்து அடைந்தார்.

𑌦𑌿𑌗𑍍𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌪𑌿 𑌪𑌰𑌿𑌪𑌕𑍍𑌤𑍍𑌰𑌿𑌮𑌪𑍁𑌣𑍍𑌯𑌲𑌭𑍍𑌯𑌾𑌤𑍍
𑌸𑌰𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌦𑍇𑌵𑌿 𑌤𑌵𑌾𑌵𑌤𑌾𑌰𑌾𑌤𑍍 ।
𑌯𑌤𑍍𑌰𑍈𑌵 𑌰𑌙𑍍𑌗𑌪𑌤𑌿𑌨𑌾 𑌬𑌹𑍁𑌮𑌾𑌨𑌪𑍂𑌰𑍍𑌵𑌂
𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌲𑍁𑌣𑌾𑌪𑌿 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌨𑌿𑌹𑌿𑌤𑌾𑌃 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌾𑌃 ॥ (11)

[திக்தக்ஷிணாபி பரிபக்த்ரிம புண்யலப்யாத்
ஸர்வோத்தரா பவதி தேவி தவாவதாராத் ।
யத்ரைவ ரங்கபதிநா பஹுமாநபூர்வம்
நித்ராளுநாபி நியதம் நிஹிதா: கடாக்ஷா: ॥]

(அ—ம்) ஹேதேவி! திக்-(உன் அவதாரஸ்தலமான) திக்கானது, தக்ஷிணாபி—தெற்காயிருந்தபோதிலும், பரிபக்த்ரிமபுண்யலப்யாத்-பழுத்த (பலனைத்தரக்கூடிய) புண்யங்களால் அடையக்கூடிய, தவ அவதாராத்—உன் அவதாரத்தினால், ஸர்வோத்தரா—எல்லாவற்றைக்காட்டிலும் உயர்ந்ததாக (வடக்குதிக்காக) பவதி—ஆகிறது. யத்ரைவ—எந்த தென்திசையிலேயே, நித்ராளுநா அபி—எப்போதும் யோகநித்ரையுடன் கூடியவராயிருந்த போதிலும், ரங்கபதிநா—ஸ்ரீ ரங்கநாதனாலே, பஹுமாநபூர்வம்—'தன் ப்ரியதமையின் ஆவிர்பாவஸ்தலம்' என்கிற பஹுமாநத்துடன், நியதம்—ஸர்வகாலத்திலும், கடாக்ஷா:—கடாக்ஷங்கள், நிஹிதா:—வைக்கப்பட்டனவோ!

(கரு) தேவி! நீ அவதரித்த திசை தென்திசையாயினும், அநேக ஜன்மங்கள்தோறும் செய்யப்பட்ட புண்யங்களின் பரிபக்வதசையினால் அடையத்தகுந்த உன் அவதாரத்தைப் பெற்றதால், எல்லாதிசைகளுள் (வடக்காக) உத்க்ருஷ்டமாக ஆகிறது. மேலும், உன் அவதாரஸ்தலமென்று பஹுமாநத்துடன் உன் ப்ரியதமனான ஸ்ரீ ரங்கநாதன் தன் யோக நித்ரையிருக்கச்செய்தேயும் எக்காலத்திலும் அந்த திசையில் கடாக்ஷத்தை வைத்திருக்கிறார். அதனால் அந்த திசை உயர்ந்ததாகிறது.

𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌦𑍇𑌵𑌿 𑌭𑌵𑌤𑍀𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑌯𑍋𑌗𑌾𑌤𑍍
𑌗𑍋𑌦𑌾𑌵𑌰𑍀 𑌜𑌗𑌦𑌿𑌦𑌂 𑌪𑌯𑌸𑌾 𑌪𑍁𑌨𑍀𑌤𑍇 ।
𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌸𑌮𑍇𑌤𑍍𑌯 𑌸𑌮𑌯𑍇𑌷𑍁 𑌚𑌿𑌰𑌂 𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌤𑍍
𑌭𑌾𑌗𑍀𑌰𑌥𑍀𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌯𑍋𑌽𑌪𑌿 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌪𑍁𑌣𑍍𑌯𑌾𑌃 ॥ (12)

[ப்ராயேண தேவி பவதீ வ்யபதேசயோகாத்
கோதாவரீ ஜகதிதம் பயஸா புநீதே ।
யஸ்யாம் ஸமேத்ய ஸமயேஷு சிரம் நிவாஸாத்
பாகீரதீப்ரப்ருதயோபி பவந்தி புண்யா: ॥]

(அ—ம்) ஹேதேவி! கோதாவரீ—கோதாவரி என்கிற நதியானது, பவதீவ்யபதேசயோகாத்-உன்னுடைய திருநாமத்தின் ஸம்பந்தத்தினால், இதம் ஜகத்—இந்த உலகத்தை, பயஸா—தீர்த்தத்தினால், ப்ராயேண—அநேகமாக, புநீதே—பரிசுத்தப்படுத்துகிறது. பாகீரதீப்ரப்ருதயோபி—கங்கைமுதலான நதிகளும், ஸமேத்ய—சேர்ந்து, யஸ்யாம்—எந்த

கோதாவரிநதியில், ஸமயேஷு— புண்யகாலங்களில், சிரம்- வெகுகாலம், நிவாஸாத்—வஸிப்பதனுல், புண்யா:—பரிசுத்தங்களாக, பவந்தி— ஆகின்றனவோ

(கரு) உலகத்தில் பாபத்தையெல்லாம் போக்கடிப்பதாகப் ப்ரஸித்திபெற்ற கங்கை, யமுனே முதலிய நதிகளும் ஒவ்வொரு புண்யகாலங்களில், பாபிகளுடைய ஸம்ஸர்க்கத்தினுலுண்டான பாபம் போகும்வரையில் எந்த கோதாவரியில் வஸித்து பரிசுத்தங்களாக ஆகின்றனவோ, அப்படிப்பட்ட கோதாவரிநதியும் உன் திருநாமத்தை வஹித்ததினுலேயே ஜகத்தைப் பரிசுத்தப்படுத்தும் பெருமை பெற்றதெனில் உன்னுடைய ஸர்வ பாவநத்வம் கைமுதிகந்யாய ஸித்தமன்றோ?

𑌨𑌾𑌗𑍇𑌶𑌯𑌸𑍍𑌸𑍁𑌤𑌨𑍁 𑌪𑌕𑍍𑌷𑌿𑌰𑌥𑌃 𑌕𑌥𑌂 𑌤𑍇
𑌜𑌾𑌤𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌂𑌵𑌰𑌪𑌤𑌿𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑌃 ।
𑌏𑌵𑌂𑌵𑌿𑌧𑌾𑌃 𑌸𑌮𑍁𑌚𑌿𑌤𑌂 𑌪𑍍𑌰𑌣𑌯𑌂 𑌭𑌵𑌤𑍍𑌯𑌾𑌃
𑌸𑌨𑍍𑌦𑌰𑍍𑌶𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑌰𑌿𑌹𑌾𑌸𑌗𑌿𑌰𑌸𑍍𑌸𑌖𑍀𑌨𑌾𑌂 ॥ (13)

[நாகேசயஸ்ஸுதநு பக்ஷிரத: கதம் தே
ஜாதஸ்ஸ்வயம்வரபதி: புருஷ: புராண: ।
ஏவம்விதா: ஸமுசிதம் ப்ரணயம் பவத்யா:
ஸந்தர்சயந்தி பரிஹாஸகிரஸ்ஸகீநாம் ॥]

(அ—ம்) ஹே ஸுதநு— அழகிய திருமேனி வாய்ந்தவளே, தே- உனக்கு, நாகேசய:- பாம்பின்மேல் படுத்துக்கொண்டிருப்பவனும், பக்ஷிரத:— பக்ஷியை வாஹநமாக உடையவனும், புராண:— வயதானவனுமாயிருக்கிற, புருஷ:- புருஷன், கதம்- எப்படி, ஸ்வயம்வரபதி:— ஸ்வயம்வரத்திற்கு உரிய பதியாக, ஜாத:— ஆனுன்; ஏவம்விதா:— இப்படிப்பட்ட, ஸகீநாம் பரிஹாஸகிர:- ஸகிகளுடைய பரிஹாஸ வார்த்தைகள், பவத்யா:- உன்னுடைய, ஸமுசிதம்— தகுந்த, ப்ரணயம்— அன்பை, ஸந்தர்சயந்தி— வெளிப்படுத்துகின்றன.

(கரு) ஹே ஸுந்தரி! க்ரூரமாயும் பயங்கரமாயுமிருக்கிற பாம்பின்மேல் படுத்து உறங்குபவனே வரித்தாயே, அவன் ஸமீபம் எப்படி செல்லத்துணிவாய்? அல்பப்ராணனே உடையதும் சஞ்சலமாயுமுள்ள கருடன்மேல் ஊர்ந்து செல்பவனே வரித்த நீ அவனிடம் எப்படி ஓரிடத்திலிருந்து இல்லறம் நடத்துவாய்? யுவதியான நீ வயதறிய முடியாத கிழவனே வரித்தாயே எப்படி இவரிடம் இன்பம் அநுபவிப்பாய்? என்பவைபோன்ற உன் தோழிகளின் பரிஹாஸமொழிகள், ‘சென்றால் குடையாம்’ என்கிற ரீதியில் எந்தகாலத்திலும் பகவானேவிட்டுப்பிரியாது கைங்கர்யம் செய்கிறவராயும், நல்ல வாஸனே, ஸௌகுமார்யம், சீதளம், வைசால்யம் முதலிய அநேக படுக்கையின்குணங்களோடுகூடி ஆயிரம் பணமண்டலங்களேயுடையவருமான ஆதிசேஷன்மேல் பள்ளிகொண்ட அநந்தசயனனே வரித்தாய்யென்றும், வேதஸ்வரூபியும், அம்ருதாஹரணுதிகளினுல் ப்ரஸித்திபெற்ற வீர்யமுள்ளவருமான பக்ஷிராஜனே வாஹநமாயுடைய ஸர்வேச்வரனேயல்லவோ நீ வரித்தாய் என்றும், புராண புருஷனுகிய ஜகத்காரணனுன நாராயணனேயன்றோ நீ வரித்தாய் என்றும், உன் அழகிற்கும் மேன்மைக்

கும் தக்கவாறு உன் இச்சை அமைந்தது'' என்றும் காட்டுகின்றன.

𑌤𑍍𑌵𑌦𑍍𑌭𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌲𑍍𑌯𑌸𑍁𑌰𑌭𑍀𑌕𑍃𑌤𑌚𑌾𑌰𑍁𑌮𑍌𑌲𑍇𑌃
𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌭𑍁𑌜𑌾𑌨𑍍𑌤𑌰𑌗𑌤𑌾𑌮𑌪𑌿 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀𑌮𑍍 ।
𑌪𑌤𑍍𑌯𑍁𑌸𑍍𑌤𑌵𑍇𑌶𑍍𑌵𑌰𑌿 𑌮𑌿𑌥𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌘𑌾𑌤𑌲𑍋𑌲𑌾𑌃
𑌬𑌰𑍍𑌹𑌾𑌤𑌪𑌤𑍍𑌰𑌰𑍁𑌚𑌿𑌮𑌾𑌰𑌚𑌯𑌨𑍍𑌤𑌿 𑌭𑍃𑌙𑍍𑌗𑌾𑌃 ॥ (13)

[த்வத்புக்தமால்யஸுரபீக்ருதசாருமௌளே:
த்யக்த்வா புஜாந்தரகதாமபி வைஜயந்தீம்।
பத்யுஸ்தவேச்வரி மித: ப்திகாதலோலா:
பர்ஹாதபத்ரருசிமாரசயந்தி ப்ருங்கா: ॥]

(அ—ம்) ஹே ஈச்வரி— பிராட்டியே, ப்ருங்கா:—வண்டுகள், த்வத்புக்த— உன்னால் அநுபவிக்கப்பட்ட, (சூடிக்கொடுக்கப்பட்ட) மால்ய—மாலையினால், ஸுரபீக்ருத—வாஸனை யுள்ளதாகச் செய்யப்பட்ட, சாரு-அழகான, மௌளே:—கேசங்களையுடையவரான, தவ பத்யு:— உன் பர்த்தாவான ரங்கநாதனுடைய, புஜாந்தரகதாம் — திருமார்பையடைந்த, வைஜயந்தீம் அபி—வைஜயந்தியென்கிற வனமாலையையும், த்யக்த்வா—விட்டு, மித:ப்ரதிகாத-(பாக்கும்போது) ஒன்றுக்கொன்றின் சிறகு அடித்துக்கொள்வதால், லோலா:— சஞ்சலங்களாகி, பர்ஹாதபத்ரருசிம்—மயில்தோகைக்குடையின் சோபையை, ஆரசயந்தி — செய்கின்றன.

(கரு) ஹே ஈச்வரி! நீ சூடிக்கொடுத்தமாலையை தரித்ததினால் எம்பெருமானுடைய கேசபாசங்கள் மிகவும் பரிமளமுள்ளதாயிற்று. பகவானது திருமார்பிலிருக்கும் வைஜயந்தி மாலை நல்ல பரிமளமுள்ளதாயிருந்தாலும் அதைவிட உன்மாலை உயர்ந்ததாயிருப்பதால் அதைவிட்டு வண்டுகள் பகவானுடைய கேசங்களில் ஒன்றுக்கொன்று இறகுகளை அடித்துக் கொண்டு வந்து வட்டமிட்டுக்கொண்டிருந்தன. அதைப்பார்த்தால் மயில்தோகைக் குடை போன்ற தோற்றமளித்தது.

𑌆𑌮𑍋𑌦𑌵𑌤𑍍𑌯𑌪𑌿 𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌯𑌙𑍍𑌗𑌮𑌾𑌪𑌿
𑌰𑌾𑌗𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌪𑌿 𑌲𑌲𑌿𑌤𑌾𑌪𑌿 𑌗𑍁𑌣𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌪𑌿 ।
𑌮𑍌𑌲𑌿𑌸𑍍𑌰𑌜𑌾 𑌤𑌵 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌕𑌿𑌰𑍀𑌟𑌭𑌾𑌜𑌾
𑌗𑍋𑌦𑍇 𑌭𑌵𑌤𑍍𑌯𑌧𑌰𑌿𑌤𑌾 𑌖𑌲𑍁 𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑍀 ॥ (14)

[ஆமோதவத்யபி ஸதா ஹ்ருதயங்கமாபி
ராகாந்விதாபி லலிதாபி குணோத்தராபி।
மௌளிஸ்ரஜா தவ முகுந்தகிரீடபாஜா
கோதே பவத்யதரிதா கலு வைஜந்தீ ॥

(அ—ம்) ஹே கோதே— கோதாதேவியே, வைஜயந்தீ—வனமாலையானது, (ஒருபெண்) ஆமோதவத்யபி— நல்ல வாஸனையுள்ளதாயிருந்தபோதிலும், (ஸந்தோஷத்துடன்கூடியவளாயிருந்தபோதிலும்) ஸதா—எப்போதும், ஹ்ருதயங்கமாபி— திருமார்பை அடைந்திருந்த

போதிலும், (பகவானுடைய மநத்திற்குப் பிடித்திருந்தபோதிலும்) ராகாந்விதாபி-செந்நிறமுடையதாயிருந்தபோதிலும், (அன்புடன்கூடினவளாயிருந்தபோதிலும்) லலிதாபி- ம்ருதுவானதாயிருந்தபோதிலும், (இனிமையான தன்மையுடையவளாகயிருந்தபோதிலும்) குணோத்தராபி— நல்ல கயிற்றால் தொடுக்கப்பட்டிருந்தபோதிலும், (உயர்ந்த குணங்களையுடையவளாயிருந்தபோதிலும்) முகுந்த கிரீட பாஜா— பகவானுடைய கிரீடத்தையடைந்த, தவமௌளிஸ்ரஜா— உன்சிரஸ்ஸில் அணியப்பெற்ற மாலையினால், (ஒரு பெண்ணால்) அதரிதா கலு— தாழ்ந்ததாகச் செய்யப்பட்டதல்லவா. (திரஸ்கரிக்கப்பட்டாளல்லவா!)

(கரு) ஹே கோதே! உன்னால் சூடிக்கொடுக்கப்பட்ட மாலை முகுந்தனுடைய சிரஸ்ஸில் ஸமர்ப்பிக்கப்பட்டது. மார்பிலிருக்குந் திருத்துழாய்மாலை நல்ல வாஸனையுள்ளதாயும் திருமாலின் திருமார்பைவிட்டகலாமலும், செந்நிறமுள்ள இளம் தளிர்களினால் அமைந்ததாயும், ம்ருதுவாயும், நல்ல கயிற்றினால் கோர்க்கப்பட்டதாயுமிருப்பினும், திருமுடியில் சூடப்பட்ட மாலையினால் கீழாக்கப்பட்டது. (இங்கு வைஜயந்தீ மௌளிஸ்ரக் என்கிற ஸ்த்ரீலிங்க சப்த ஸ்வாரஸ்யத்தினால் ஸர்வகுணங்களும்பொருந்திய இரு ஸ்த்ரீவ்யக்திகளுக்குள் சூடிக்கொடுத்தமாலை யென்கிற பெண்ணிடந்தான் எம்பெருமானென்கிற நாயகன் விசேஷ அபிமாநம் வைத்திருக்கிறபடியால் அவளே உயர்ந்தவள் என்று சொல்லப்பட்டதாயிற்று.

𑌤𑍍𑌵𑌨𑍍𑌮𑍌𑌳𑌿𑌦𑌾𑌮𑌨𑌿 𑌵𑌿𑌭𑍋𑌃 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌗𑍃𑌹𑍀𑌤𑍇
𑌸𑍍𑌵𑌚𑍍𑌛𑌨𑍍𑌦𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌪𑍀𑌤𑌿𑌰𑌸𑌪𑍍𑌰𑌮𑍋𑌦𑌾𑌃 ।
𑌮𑌞𑍍𑌜𑍁𑌸𑍍𑌵𑌨𑌾 𑌮𑌧𑍁𑌲𑌿𑌹𑍋 𑌵𑌿𑌦𑌧𑍁𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌤𑍇
𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌵𑌰𑌂 𑌕𑌮𑌪𑌿 𑌮𑌙𑍍𑌗𑌲𑌤𑍂𑌰𑍍𑌯𑌘𑍋𑌷𑌮𑍍 ॥ (15)

[த்வந்மௌளிதாமநி விபோ: சிரஸா க்ருஹீதே
ஸ்வச்சந்தகல்பிதஸபீதிரஸப்ரமோதா: ।
மஞ்ஜுஸ்வநா மதுலிஹோ விதது: ஸ்வயந்தே
ஸ்வாயம்வரம் கமபி மங்களதூர்யகோஷம் ॥]

(அ—ம்) விபோ:- ப்ரபுவான பகவானுடைய, சிரஸா- திருமுடியால், க்ருஹீதே— ஸ்வீகரிக்கப்பட்ட, த்வந்மௌளிதாமநி- உன்சிரஸ்ஸின் மாலையில், ஸ்வச்சந்தகல்பித-யதேச்சையாகச் செய்யப்பட்ட, ஸபீதிரஸ-சேர்ந்து பருகுவதிலுண்டான, ப்ரமோதா:— ஸந்தோஷத்தை உடையனவாயும், மஞ்ஜுஸ்வநா:- இனிய சப்தத்தை உடையனவாயுமிருக்கிற, மதுலிஹ:— வண்டுகள், தே- உனக்கு, ஸ்வாயம்வரம்- ஸ்வயம்வரகாலத்திலுண்டான, கமபி-ஒரு, மங்களதூர்யகோஷம்- மங்களார்த்தமான வாத்யங்களின் சப்தத்தை, ஸ்வயம்- தாங்களாகவே, விதது:— செய்தன.

(கரு) உன்னால் சூடிக்கொடுக்கப்பட்டு உன் பர்த்தாவான லோகநாதனால் தரிக்கப்பட்ட மாலையின் தேனை யதேச்சையாகச் சேர்ந்து பருகுவதில் ஸந்தோஷத்துடன் வண்டுகள், நன்றாய் பருகி மதத்தினால் செய்த இனிய ரீங்காரம் உன் ஸ்வயம்வர காலத்தில் மங்களவாத்யங்கள் முழங்குவதுபோலிருந்தது.

𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌯𑌮𑌾𑌨𑌰𑌜𑌸𑌾 𑌕𑌮𑌲𑍇𑌨 𑌨𑌾𑌭𑍌
𑌵𑌕𑍍𑌷𑌃𑌸𑍍𑌥𑌲𑍇 𑌚 𑌕𑌮𑌲𑌾𑌸𑍍𑌤𑌨𑌚𑌨𑍍𑌦𑌨𑍇𑌨।
𑌆𑌮𑍋𑌦𑌿𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨𑌿𑌗𑌮𑍈𑌰𑍍𑌵𑌿𑌭𑍁𑌰𑌙𑍍𑌘𑍍𑌰𑌿𑌯𑍁𑌗𑍍𑌮𑍇
𑌧𑌤𑍍𑌤𑍇 𑌨𑌤𑍇𑌨 𑌶𑌿𑌰𑌸𑌾 𑌤𑌵 𑌮𑍌𑌲𑌿𑌮𑌾𑌲𑌾𑌮𑍍॥ (16)

[விச்வாயமா நரஜஸா கமலேந நாபௌ
வக்ஷஸ்தலே ச கமலாஸ்தநசந்தநேந।
ஆமோதிதோபி நிகமைர்விபுரங்க்ரியுக்மே
தத்தே நதேந சிரஸா தவ மௌளிமாலாம்॥]

(அ—ம்) விபு:- ப்ரபுவான பத்மநாபன், விச்வாயமானரஜஸா- ப்ரபஞ்சமாக ஆகிற பொடிகளை உடையதான, கமலேந- தாமரை மலரால், நாபௌ- நாபியிலும், வக்ஷஸ்தலே— திருமார்பில், கமலாஸ்தநசந்தநேந ச—ஸ்ரீதேவியின் ஸ்தனங்களின் சந்தனத்தினாலும், அங்க்ரியுக்மே— இரண்டு திருவடிகளில், நிகமை:—வேதங்களினாலும், ஆமோதிதோபி- வாஸனை உடையவராயிருப்பினும், நதேந- வணங்கின, சிரஸா— திருமுடியால், தவ—உன்னுடைய, மௌளிமாலாம்— சிரஸ்ஸால் சூடிக்கொடுத்த மாலையை, தத்தே— தரிக்கிறார்.

(கரு) நாபியிலுள்ள தாமரைபுஷ்பம் ப்ரபஞ்சத்திற்குக் காரணமான கந்தப்ரதானமான அநேக பராகங்களை உடையதால் உன் நாதனுடைய நாபி மிகவும் வாஸனை யுள்ளது. திருமார்போ தாமரைப்பூவினின்றுதித்த லக்ஷ்மியின் திருமார்பில் பூசப்பட்ட சந்தனத்தினால் பரிமளமுள்ளதாயிருக்கிறது, வேதங்கள் புஷ்கலமான அர்த்தமுள்ள பதங்களால் பகவானுடைய திருவடிகளை ஸ்தோத்ரம் செய்வதால் திருவடிகள் வேதங்களினால் மிகவும் வாஸனை பெற்றதாகின்றன. இப்படி திருமார்பு, திருநாபி, திருவடி இவைகளில் பரிமளமிருந்தபோதிலும், அதிலும் அத்ருப்தனாகி எம்பெருமான் திருமுடியில் உன்னால் சூடிக்கொடுக்கப்பட்ட மாலையினால் அதிகபரிமளம் ஸம்பாதிக்கவேணுமென்று திருவுள்ளம் பற்றி வணங்கின திருமுடியால் உன் மாலையைத் தரிக்கிறான்.

𑌸𑍂𑌤𑍍𑌰𑌪𑌦𑍇𑌨 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌤𑌵𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌂
𑌮𑌾𑌲𑌾𑌮𑌪𑌿 𑌤𑍍𑌵𑌦𑌲𑌕𑍈𑌰𑌧𑌿𑌵𑌾𑌸𑍍𑌯 𑌦𑌤𑍍𑌤𑌾𑌮𑍍।
𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣 𑌰𑌙𑍍𑌗𑌪𑌤𑌿𑌰𑍇𑌷 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑌿 𑌗𑍋𑌦𑍇
𑌸𑍌𑌭𑌾𑌗𑍍𑌯𑌸𑌮𑍍𑌪𑌦𑌭𑌿𑌷𑍇𑌕𑌮𑌹𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌮𑍍॥ (17)

[ஸூத்ரபதேந பரிக்ருஹ்ய தவோத்தரீயம்
மாலாமபி த்வதலகைரதிவாஸ்ய தத்தாம்।
ப்ராயேண ரங்கபதிரேஷ பிபர்தி கோதே
ஸௌபாக்யஸம்பதபிஷேகமஹாதிகாரம்॥]

(அ—ம்) ஹே கோதே- கோதையே! ஏஷ: ரங்கபதி:- இந்த ரங்கநாதன், தவ- உன்னுடைய, உத்தரீயம்- மேல் வஸ்த்ரத்தையும், த்வதலகை:- உன் முன்நெற்றி மயிர்களால், அ

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா சந்தாவரவு. 1951ௌ நவம்பர்மீ.

சந்தாஎண்	பெயரும் விலாஸமும்	வருஷம்	தொகை ரூ
16	ஸ்ரீ. C. S. ஐயங்கார், பம்பாய்.	52	3
165	,, K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம்.	51	3
201	,, V. K. பார்த்தஸாரதி, திருவல்லிக்கேணி.	51	3
252	,, K. லக்ஷ்மீநரஸிம்ஹ ஐயங்கார், கோவில்வெண்ணி.	51–52	6
277	அண்ணாமலை யூனிவர்ஸிடி லைப்ரரி, சிதம்பரம்.	52	3
278	ஸ்ரீ சேஷாத்திரி ஐயங்கார், திருக்கண்ணமங்கை.	48	3
284	,, K. N. தேசிகாசார்யர், திருவள்ளூர்.	51	3
	,, K. S. கோபாலஸாமி ஐயங்கார், திருவல்லிக்கேணி.	51	3
402	ஸ்ரீமதி ரங்கம்மாள், திருவல்லிக்கேணி.	51	3
407	ஸ்ரீ. S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், கரூர்.	52	3
838	,, V. ரங்காச்சாரியார், எழும்பூர், மதருஸ்.	50–51	6
908	,, N. கோவிந்தராஜன், மதருஸ்.	51	3
1042	,, P. S. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், திருச்சி.	51	3
1043	,, N. ராஜகோபாலாசாரியார், உறையூர்.	52	3
1059	,, R. கேசவ ஐயங்கார், திருவல்லிக்கேணி.	51–52	6
1160	,, S. ராமஸ்வாமி ஐயங்கார், டில்லி.	51	3
1161	,, K. துரைஸாமி ஐயங்கார், பார்க் டவுன்.	51–52	$3\frac{1}{2}$
		ஆ ரூ	$60\frac{1}{2}$

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா முன் வருஷங்களின் ஸஞ்சிகைகள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாவின் சென்ற ஸம்புடங்களின் ஸஞ்சிகைகளில்கீழ் குறிக்கப்பட்ட ஸஞ்சிகைகள் செலவாகிவிட்டதால் அவைகள் தவிர மற்ற ஸஞ்சிகைகள் ஸ்வல்ப ப்ரதிகளே கைவசமிருக்கின்றன. அபேக்ஷையுள்ளவர்கள் உடனே எழுதி தருவித்துக்கொள்ளவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். ஒரு ஸஞ்சிகையின் விலை அணா 4.

கைவசமில்லாத ஸஞ்சிகைகளின் விவரம்.

ஸம்புடம்	1	4	7	8	9
ஸஞ்சிகை	3	5, 6, 7.	11, 12.	1	2

Regd. No. M. 4437.

உங்கள் சந்தா நெம்பர் ☞ 768

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 DEC 1951
619
MADRAS

முக்கிய அறிவிப்பு

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் கார்யங்களுடைய நிர்வாஹத்தில் நேர்ந்த சில மாறுதல்கள் காரணமாக ஏற்பட்ட விலாஸமாறுதல் கீழே கொடுக்கப்படுகிறது:—

|
V

மானேஜர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
45, கல்விவாரு தெரு,
மயிலாப்பூர்-சென்னை-4.

The Manager,
Sri Nrisimhapriya,
45, Calvivaru Street,
Mylapore. Madras-4.

இனி சந்தாதார்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேணும். சந்தாதார்களின் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களையும் ஷை விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லா கடிதப்போக்குவரத்துக்களும் மேலேகண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும்.

*　*　*　*　*

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்படவேண்டிய வ்யாஸங்கள், மற்ற விஷயங்கள், ப்ரசுரிக்கப்பட்ட வ்யாஸங்கள் முதலியவை விஷயமான ஆக்ஷேபங்கள், ஸமாதானங்கள், அபிநந்தனங்கள் முதலியவைகள்மட்டும் கீழேகண்ட விலாஸத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

ஸம்பாதகர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
மாலோலாலயம்,
திருநாகேஸ்வரம்.

The Editor,
Sri Nrisimha priya,
Malolalayam,
Tirunagesvaram.

Printed by J. Rangachariar, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvellore. Edited & Published by P. S. Srinivasa Desikachariar, No. 2. Audiappa mudali Street, Vepery, Madras, 7.